

PROTONTECH
175, Main Street
Trincomalee
075 6602486



அறைவு 02 இயம் 35 April 26 - May 05, 2014

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு
MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பக்கங்கள் : 16 விலை : 30.00 பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்



பெஃஷன் ஹோம்
FASHION HOME


No.359, மரத்தடி சந்தி. பிரதான வீதி.திருகோணமலை.
0777911996, 0774352689


# வெள்ளைமணல் பிரதேசம் வான்படை வசம் ?




வெள்ளைமணல் பிரதேசத்தில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காணிகளை வான்படை தனது தேவைக்காக கையகப் படுத்தியுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

பிரித்தானிய செய்திச் சேவையானது (பி.பி.சி) இச் செய்தியை வெளியிட்டுள்ளது.

அச் செய்தியின் படி "திருகோணமலை மாவட்டம் சீனன்குடாவை அண்மித்த வெள்ளைமணல் கடலோர பகுதியில் பொதுமக்கள் தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்டுவந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் காணி விமானப்படையினரால் திடீரென கையகப்படுத்தப்படுவதாக உள்ளூர் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மாபிள்பீச் தொடக்கம் கருமலையூற்று வரையிலான நிலப்பகுதியை விமானப்படை சுவீகரிப்பதற்கான.. 13

## 6 மாதக் குழந்தையுடன் மூன்று குழந்தைகளை வீட்டிற்குள் பூட்டிச் செல்லும் பெற்றோர்

பெரியகுளம் பிரதேசத்தில் தமது நான்கு குழந்தைகளையும் வீட்டினுள் வைத்து பூட்டிவிட்டு பெற்றோர்கள் வேலைக்குச் செல்லும் அதிர்ச்சித் தகவல் வெளியானதை அடுத்து அப்பிரதேசத்திற்கு சென்றபோது அத் தகவல் உண்மையானது எனத் தெரியவந்துள்ளது.

காட்டில் விறகுகளைச் சேகரிக்கச் செல்லும் பெற்றோர் நாளாந்தம் தமது 6 மாதக் கைக்குழந்தையையும் ஏனைய மூன்று குழந்தைகளையும் அவ்வாறு வீட்டிற்குள் வைத்துப் பூட்டிச் செல்வதை அக்கிராம மக்கள் உறுதி செய்தனர்...... 13

# "தமிழ்த் தேசியத்தின் மீதான கிறிஸ்தவ சகோதரர்களின் பலத்தைச் சிதைக்க முயற்சி"

## "யாழ் சம்பவத்தின் பின்னணியில் விசமிகள் பலர்"
## - சி.சிறீதரன் – நா.உ



தமிழ் மக்களின் தேசிய பிரச்சினையோடு நெருங்கியிருந்து நீதிக்காக குரல் கொடுத்துவரும் கிறிஸ்தவ மதப் பெரியார்கள் மீது அவதூறு பூசும் வகையில் அண்மைக் காலமாக விசமிகளால் முன்னெடுக்கப்பட்டுவரும் சம்பவங்கள் தொடர்பில் பா.உறுப்பினர் சி.சிறீதரன் உத்தியோகபூர்வ அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

தமிழ் மக்களின் வாழ்வுப் பாதையில் இந்தக்காலம் மிகவும் இருண்ட காலமாகவே இருக்கின்றது. இப்போது நம்மண்ணில் அதர்மம் கடை விரித்திருக்கின்றது.

யாரை எப்போது வேண்டுமானாலும் எத்தகைய அவதூறு சுமத்தியும்....


JKABpark
The Garden of Pleasures
JKAB PARK HOTEL (PVT) LTD



- 28 Nos Cottage Style Rooms with AC, WiFi, TV, Mini Fridge, Intercom and Hot water for Suite, Standard and Family Rooms (Rs. 3500 - Rs. 12,000)
- Three Restaurants are opening from 7 am to 10 pm for Sri Lankan, Indian, Chinese and Western menus and Buffet meals
- Three Wedding and Conference Halls
- Huge Garden and Parking Area

Tel: 026 2227361, 026 4925244



திருஞானசம்பந்தர் வீதியில் இருந்து பிரதான வீதியில் (மரத்தடி)

20வீத விலைக்கழிவு




HP ORIGINAL PRODUCT STORE

HP Authorized Consumer Partner
STRANGERS COMPUTERS PVT LTD
345,Main Street, Trincomalee. Tel : 026 -2226730/4924205
E-mail : strangers.computers@gmail.com Web : www.strangersteam.net


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
malaimurasu@hotmail.com 075-4252042

## நம்பிக்கை - இருவழிப்பாதை ....

மீளவும் ஓர் உள்நாட்டுப் போரை நடாத்த முயன்றதாகவும் அதற்காக பலர் ஒன்று கூடியதாகவும் தகவல்கள் பரவலாக வெளிவந்தது.

அதனைத் தொடர்ந்து அவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு ஒன்று கூடினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஐம்பதுக்கும் மேற்பட்ட தமிழர்கள் பால்வேறுபாடின்றியும் வயது வேறுபாடின்றியும் கைதாகி மூன்றுமாதத் தடுப்பிலிடப்பட்டுள்ளனர்.

அதேவேளை உள்நாட்டுப் போரை, அல்லது பயங்கரவாத நடவடிக்கையை முன்னெடுப்பதற்காகத் தலைமை வகித்தார்கள் என்ற குற்றச்சாட்டுடன் போராளிகள் மூவர் சுட்டுக் கொல்லப்பட்டுவிட்டதான தகவலையும் அரச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்தத் தகவல்களின் அடிப்படையில் போருக்கான முனைப்பு உண்மையிலேயே இருந்ததா? என ஆராய வேண்டிய தேவை தமிழர்களின் மத்தியில் எழுந்துள்ளது.

போரை நடத்துவதற்கு பொருளாதாரம், மக்கள் ஆதரவு ஆகிய இரண்டும் மட்டும் இன்றைய பூகோளமயமான உலகில் போதாது என்பது எல்லோருக்கும் தெரியும். அப்போரை நடாத்துவதற்கு உலகின் ஆதரவு இன்றியமையாதது.

சரி! புலம்பெயர் அமைப்புக்களின் பொருளாதார பலத்தைப் பெற்றுக்கொள்ளலாம்... ஆனால் நிலத்தில் மக்களின் ஆதரவு இப் போர் முனைப்பிற்குக் கிடைக்குமா?

ஒரு முப்பதாண்டுகால போரில் எதுவுமற்ற நிலைக்கு தள்ளப்பட்டிருக்கும் ஈழத்துத் தமிழர்கள் மீண்டும் ஓர் ஆயுதப் போருக்கு என்றும் ஆதரவளிக்கப் போவதில்லை. ஏனெனில் ஆயுதப் போரின் போக்கில் மாற்றம் ஏற்படத் தொடங்கியதன் பின்னர் ஆதரவளித்த அம்மக்களை நோக்கியே போராளிகளின் ஆயுதங்கள் திரும்பியதை நாங்கள் இன்னும் மறக்கவில்லை.

மாற்றுக்கருத்தியலுக்கு இடமின்றி சுட்டுக்கொல்லப்பட்ட பல தமிழரது சாவிற்குப் பொறுப்புக் கூறவேண்டியவர்கள் தமிழர்களே!

எனவே நிலத்தில் மக்கள் ஆயுதப் போருக்கு ஆதரவளிக்கப் போவதில்லை. ஆதலால் புலத்தின் பொருளாதார உதவியோ, சர்வதேசத்தின் ஆதரவோ நிலத்தில் போராட்டத்தை முன்னெடுக்கப் போதுமாயிருக்கப் போவதில்லை.

ஆனால் போரில் வென்றதாகக் கூறிக்கொள்ளும் மற்றைய தரப்பு வெல்லப்பட்ட மக்களின் மீது. ஐந்து ஆண்டுகள் கடந்த நிலையிலும் போர்முகத்தைக் காட்டிக் கொண்டிருப்பதே வெல்லப்பட்ட தரப்பின் போர்ச்சிந்தனை சரியானதோ என்ற எண்ணத் தோற்றத்தை உருவாக்கிக்கொண்டிருக்கின்றது.

ஐந்து ஆண்டுகள் கடந்த நிலையிலும் வெல்லப்பட்ட மக்களை நம்பமுடியாது என்று கூறிக்கொண்டு தனது இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றது அரசு.

ஆனால் அவ் அரசை, அதன் நடவடிக்கைகளை வெல்லப்பட்டதாகக் கூறப்படும் தமிழ் தரப்பு நம்ப வேண்டும் என்ற கோரிக்கை அல்லது எதிர்பார்ப்பு அரச தரப்பிடம் காணப்படுகின்றது.

நாங்கள் நம்ப மாட்டோம்... ஆனால் நீங்கள் எங்களை நம்புங்கள் என அரசு தமிழ் மக்களை நோக்கி பல வழிகளில் கோருகின்றது.

நம்பிக்கை என்பது இருவழிப்பாதை... ஐந்து வருட அற்புதமான காலப்பகுதியில் அரசு அதனைக் கட்டியெழுப்பவில்லை என்பதே உண்மை... புரிந்துகொள்வார்களா...

## 2010ல் கஞ்சாவுடன் கைதானவருக்கு 2014ல் தண்டனை

2010ம் ஆண்டில் 17.5 கிராம் கஞ்சாவுடன் கைதான அக்கரைப்பற்றுவாசியொருவருக்கு 2014ல் ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நபர் கடந்த 2010 ஆம் ஆண்டு 17.5 கிராம் கஞ்சாவை வைத்திருந்தமை, 5 கிராம் கஞ்சாவை விற்பனை செய்தமை போன்ற குற்றங்களுக்காக அக்கரைப்பற்று காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார். அதனையடுத்து கல்முனை நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணைகளின் பின் 6 மாத காலம் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் அந்த நபரின் வழக்கினை விசாரணை செய்ய முடியும் என கல்முனை மேல் நீதிமன்றத்தில் தெரிவிக்கப் பட்டதனையடுத்து நேற்று செவ்வாய்க்கிழமை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் மேற்படி நபர் ஆஜர்படுத்தப்பட்டபோது நீதிவான் மேற்படி உத்தரவினை பிறப்பித்தார்.

## குச்சவெளி மீனவர் சடலமாக மீட்பு

மீன்பிடிப்பதற்காகக் கடலுக்குத் தனியாகச் சென்ற குச்சவெளி மீனவரின் படகு மட்டும் கடலில் இருந்து மீட்கப்பட்டதைத் தொடர்ந்து காணாமற்போயுள்ள மீனவரைத் தேடும் பணிகள் முடுக்கி விடப்பட்டிருந்தது.

கடந்த 24ம் திகதி மாலை இம் மீனவரின் சடலம் கரையொதிங்கியுள்ளது.

குச்சவெளி ஜாயா நகரைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான அப்பாஸ் ராசிக்கின் (வயது 32) என்பவரே 21 ஆம் திகதி மாலை 5 மணியளவில் படகில் தனியாக மீன்பிடிக்கச் சென்றுள்ளார். கடலில் இருந்து ஆளின்றி அவரது படகு மீட்கப்பட்டதை அடுத்தே மீனவர் காணாமற்போயுள்ள விடயம் தெரியவந்துள்ளது. இத்தேடுதல் பணியில் கடற்படையினர் பாதுகாப்புப்படையினர் மற்றும் மீனவர்கள் ஈடுபட்டு வந்தனர்..

## காட்டுயானைத் தொல்லையைக் கட்டுப்படுத்த கலந்துரையாடல்

(திருகோணமலை மேலதிக நிருபர்)

கந்தளாய் பிரதேச பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேருவில பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 21 கிராம சேவகர்கள் பிரிவுகளையும் உள்ளடக்கிய சிவில் பாதுகாப்பு குழுக்களுக்கிடையிலான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் சேருவில மகாவலிகம சிங்கள மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

கந்தளாய் காவல்பிரிவுக்குட்பட்ட காவல் அத்தியட்சகர் சந்தன அத்துக்கோரல தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வின் போது காட்டு யானைகளினால் ஏற்படும் விளைவுகளைக் கட்டுப்படுத்த மின்சார வேலி அமைத்தல், பிரதேசத்தில் உள்ள சட்டவிரோதமான மதுபானசாலை, கசிப்பு உற்பத்தி அவற்றை விற்பனை செய்தல் முதலானவற்றில் ஈடுபட்டுள்ளவர்களை இனம்கண்டு அவர்களுக்கான சட்ட நடவடிக்கை எடுத்தல் பெண்கள், குழந்தைகள் மீது மேற்கொள்ளப்படும் வன்முறைகளைத் தடுத்தல் முதலான விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன. (ரிங்கோநியூஸ்)

## கணவனின் தாக்குதலால் மனைவி பலி

திருகோணமலை குமரக்கடவை, அடம்பென பகுதியில் கணவனின் தாக்குதலுக்கு உள்ளாகி மனைவி உயிரிழந்துள்ளார்.

51 வயதான யூ. தயாவதி என்ற பெண்ணே கணவனின் தாக்குதலில் உயிரிழந்துள்ளார்.

உணவு வேளையில் இவ்விருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்தர்க்கம் மோதலாக மாறியதை அடுத்து கணவரால் சாப்பாட்டுக் கோப்பையால் தாக்கப்பட்டு இம் மரணம் நிகழ்ந்துள்ளது.

திருகோணமலை பதில் நீதவான் தி. திருச்செந்தில்நாதன் சடலத்தை பார்வையிட்டு மரண விசாரணைகளின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

தாக்குதல் நடத்திய கணவரான உபசேன நந்தசிறி எதிர்வரும் 24ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## இடிஅமீனின் ஆட்சி இலங்கையில் ?



எமது நாட்டின் அரசியலமைப்பில் சட்டவாக்க சபை பிரதானமானது. அச்சபைக்கான உறுப்பினர்களான மக்கள் பிரதிநிதிகளை ஜனநாயக முறைப்படி மக்களே தெரிவு செய்கிறார்கள். இச்சபையின் உறுப்பினர்களுக்கே அழுகிய முட்டைகளை எறிந்தும் துப்பாக்கியைக் காட்டி பயமுறுத்தியும் அடிபணிய வைப்பது தார்மீக ஆட்சியா? தான்தோன்றித்தனமான ஆட்சியா? என தமிழத் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் அரியநேத்ரன் கேள்வி எழுப்பியுள்ளார்

எதிர்வரும் மே தினம் கொண்டாட்டங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடாத்துவது தொடர்பான கலந்துரையாடலொன்று அண்மையில் மட்டு. நகரில் நடைபெற்றது. அக்கலந்துரையாடலில் பங்குபற்றிய ஆதரவாளர்களின் மத்தியில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியதுடன் அரசாங்கம் தான் தோன்றித்தனமான ஆட்சியையும் வீராப்பான செயற்பாடுகளையும் தொடர்ந்து அரங்கேற்றிக் கொண்டிருக்கிறது.

தார்மீகம், சுதந்திரம், மனித உரிமை என்று பேசிக்கொள்ளும் அரசு அதனை செயலுருப்படுத்துவதில் அக்கறை செலுத்துவதில்லை இதனால் இடி அமீனின் ஆட்சி இங்கு நடக்குமோ என எண்ணத் தோன்றுகின்றது என்றும் கூறினார்.

## கன்டர் வாகனம் மோதி மரணம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை - கதிரவெளியில் 24ம் திகதி காலை கன்டர் ரக வாகனம் துவிச்சக்கர வண்டியுடன் மோதியதில் துவிச்சக்கர வண்டியில் சென்றவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை காலை 6 மணியளவில் திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியில் கதிரவெளி பால்சேனை பாடசாலைக்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் கதிரவெளியை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான செல்வம் புலேந்திரன்(35வயது) என்பவரே உயிரிழந்துள்ளதாக வாகரை காவல்துறையினர் தெரிவித்தனர்.

## இரண்டு வாரங்களாகியும் காணாமற் போன பெண்ணைப் பற்றிய செய்திகள் ஏதுமில்லை

வங்கிக்குப் பணம் எடுக்கச்சென்றபின் காணாமற் போனதாகக் கூறப்படும் இளம் யுவதி தொடர்பான தகவல்கள் தற்போதுவரை கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

களுவாஞ்சிக்குடி செட்டிபாளையம் பிரதான வீதியை சேர்ந்த 21 வயதுடைய சிவலிங்கம் வைஸ்ணவி என்ற இளம்பெண் மட்டக்களப்பில் உள்ள தனியார் வங்கியில் பணம் எடுப்பதற்காக சனிக்கிழமை (12.04.14) காலை சென்றுள்ளார்.

இந்த இளம் பெண் குறித்த வங்கிக்குசென்று பணத்தினை எடுத்துக்கொண்டு சென்றுள்ள நிலையிலும் இதுவரையில் குறித்த பெண் வீடு வந்து சேரவில்லையென, களுவாஞ்சிகுடி மற்றும் மட்டக்களப்பு பொலிஸ் நிலையங்களில் முறையிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல்போன பெண் வேறு சந்தேகத்துக்குரிய நடவடிக்கைகள் அற்றவர் எனவும் குறித்த பெண்ணின் வீட்டில் வீட்டு நடவடிக்கைகளை கவனித்துவருபவர் எனவும் பிரதேச தகவல்கள் தெரிவித்தன.


திருமலைக் கடற்கரையில் பெரியவெள்ளி ஆராதனைகள்





(கதிரவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## துப்பாக்கிகளுக்கே தெரியும் தமிழர் யாரென்று ?

அண்மையில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் இருந்து தப்பியோடிய கைதியொருவரைத் தடுக்க முடியாமல் போகவே அக் கைதியைச் சுட்டுவீழ்த்த தனது துப்பாக்கியைக் குறிபார்த்து இயக்கிய சிறைச்சாலை அதிகாரிக்குக் காத்திருந்தது அதிர்ச்சி..... துப்பாக்கி வெடிக்கவில்லை....

அது போன்ற இன்னும் ஒரு சம்பவத்தின் போது தப்பியோடிய கைதியை நோக்கி துப்பாக்கியால் சுட்டகாவலருக்கு அதிர்வு கைக்குள்ளேயே எழுந்தது.. துப்பாக்கி வெடித்து விட்டது.

அதனைத் தொடர்ந்து சிறைக்காவலர்களுக்கு என புதிய துப்பாக்கிகளைக் கொள்வனவு செய்து வழங்க சிறைச்சாலைத் திணைக்களம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அதற்கான இறுதிக்கட்ட அனுமதியைப் பாதுகாப்பு அமைச்சே வழங்க வேண்டும்.

"2012ம் ஆண்டில் நடைபெற்ற வெலிக்கடைச் சிறைச்சாலைக் கலவரத்திற்கு முன்னர் நாங்கள் ரி-56ரக தானியங்கித் துப்பாக்கிகளுடன் செயற்பட்டோம். அதன் போது எவ்வித பிரச்சனைகளையும் நாங்கள் எதிர்கொள்ளவில்லை" எனத் தெரிவித்துள்ள சிறைச்சாலை திணைக்களத்தினர் கொலைஞர்களையும் பெரும் குற்றவாளிகளையும் சிறைச்சாலைக்கும் நீதிமன்றுக்கும் அழைத்துச்சென்று வரும் சிறைக்காவலர்கள் உரிய ஆயுதம் தரித்திருத்தல் அவசியம் எனவும் தெரிவித்துள்ளனர்.

# நியாயம் கோரி சர்வதேசத்திடம் செல்லும் நிலையில் தமிழ்த்தரப்புடன் சேர்ந்துள்ள ஐ.தே.க

இலங்கையில் குறைந்த சனத்தொகையைக் கொண்டுள்ள தமிழ் இனம் தம் மீது நடத்தப்பட்ட, நடத்தப்பட்டுக்கொண்டிருக்கும் அடக்கு முறைகளுக்கும் அழிவுகளுக்கும் எதிராக நியாயம் கோரி சர்வதேசத்தின் மனசாட்சியைத் தட்டிக் கொண்டு இருக்கின்றது.

இதனையடுத்து பெருஞ்சனத்தொகையைக் கொண்ட சிங்கள அரசின் தலைவர்களும் 'எதிர்க்கட்சியினரான ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்தவர்கள் சிலரும் தமிழ்த்தரப்பு இவ்வாறு நியாயம் கோரிச் சர்வதேச நாடுகளுக்குச் செல்வதைக் கடுமையாகச் சாடியிருந்தனர்.

இவ்வாறு இருக்க ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அரசால் முன்னெடுக்கப்பட்டு, பெரும் வாதப் பிரதிவாதங்களைத் தோற்றுவித்துள்ள, மாத்தளை விமான நிலையம் மற்றும் ஹம்பாந்தோட்டை துறைமுகம் ஆகிய இரண்டையும் சென்று பார்த்து அவ்விரண்டு அபிவிருத்தித் திட்டங்கள் மூலமாக நாட்டிற்கு என்ன கிடைத்துள்ளது எனபதைப் பார்த்துவரச் சென்ற எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கடும் தாக்குதலுக்கு உள்ளானதுடன் உயிர் அச்சுறுத்தலுக்கும் உள்ளாகித் தப்பி மீண்டு வந்துள்ளனர்.

இலங்கையினரின் உயிர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு இலங்கைக் காவல்துறைக்கே உரியது எனினும் அன்றைய தினத்தில் காவல்துறையினர் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களைக் காத்து மீட்டு வந்ததில் ஊடகவியலாளர்களின் பங்குதான் மிக அதிகமாக இருந்தது.

அதனை உறுதிப்படுத்தியுள்ள காவல்துறையின் ஊடகப் பேச்சாளர் சிரேட்ட காவல்துறை அத்தியட்சகர் அஜித் ரோகண அம்பாந்தோட்டை சம்பவம் நடைபெற்ற போது பொலிஸார் சம்பவத்தை வேடிக்கை பார்த்தனர் எனத் தெரிவித்திருந்தார். அத்துடன் முதுகெலும்பில்லாத காவல்துறை அதிகாரிகளினால் தினமும் ஏற்படும் பிரச்சினையால் தனக்கு இந்த தொழில் மீதும் வெறுப்பு ஏற்பட்டுள்ளது எனவும் கூறியுள்ளார். அதனைத் தொடர்ந்து அம்பாந்தோட்டை தாக்குதல் சம்பவத்தை மூடி மறைப்பதற்கு முயற்சிக்கப்பட்டு வருவதாக தேசிய சட்டத்தரணிகள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. கைத்துப்பாக்கியுடன் சென்று தாக்குதலில் ஈடுபட்ட மேயருக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமை, விசாரணைகளை மூடிமறைக்கும் முயற்சியாகவே கருதப்பட வேண்டுமென சட்டத்தரணி நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இருக்க தமக்கு ஏற்பட்ட இந்த நிலைமைக்கு ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்த விடயம் குறித்து சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்திடமும், ஐ.நா.விடமும் எடுத்துரைத்துள்ளதாக குறிப்பிட்டார்.

# மூன்று போராளிகளின் மரணம் = "வெற்றி கொள்ளப்பட்ட கோபியின் திட்டம்"

ஐரோப்பாவைத் தளமாகக் கொண்டுள்ள விடுதலைப்புலித் தலைவர்களான நெடியவன் மற்றும் வினாயத்திகன் வழிகாட்டலில் உள்நாட்டில் புலிகளை மீள உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்ட குழுவினரின் உடனடிக் குறிக்கோள்களாக இருந்தது விடுதலைப் புலிகள் தோற்றோடிய போது அவர்களால் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களைக் கைப்பற்றிக் கொள்ளல், புலிப் புலனாய்வு வலைப்பின்னலை மீள உருவாக்குதல், புனர்வாழ்வு பெற்றுள்ள போராளிகள் உட்பட ஏனைய பொருத்தமானவர்களைக் கொண்டு போராட்டக் குழுவை உருவாக்குதல், வடக்குகிழக்கு மாகாணங்கள் உட்பட ஏனைய அனைத்து மாகாணங்களினதும் முக்கிய இலக்குகள் தொடர்பான தகவல்களைத் திரட்டிக் கொள்ளுதல் என்பனவாம்.

மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளுக்கான நிதி ஐரோப்பாவில் இருந்து உண்டியல் (ஹவாலா) முறை மூலம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அந் நிதியைக் கொண்டு பாதுகாப்பான பல வீடுகள், வாகனங்கள் உட்படத் தேவையான அனைத்தையும் கொள்வனவு செய்துள்ளனர் இந் நடவடிக்கைகளை பொறுப்பெடுத்து நடத்தியுள்ள தேவியன், கோபி மற்றும் அப்பன் ஆகிய மூவரும்.

விசாரணைகளின் போது இந் நடவடிக்கைகளில் தொடர்புடைய இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைச் செயற்பாட்டாளர்களான 62 தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களுள் 15 பேர் முக்கியமானவர்கள். மறைத்து வைக்கப்பட்ட ஆயுதங்களைத் தேடும் பணிக்காக அவர்கள் ஐந்து மிதிவெடியைக் கண்டுபிடிக்கும் கருவிகளை ''டாஸ்' என்னும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்திடம் திருடியுள்ளனர். அவற்றுள் மூன்று கருவிகள் சந்தேகத்தின் பெயரில் கைதாகியுள்ள ஜெயகுமாரியின் வீட்டிலிருந்து பின்னர் கைப்பற்றப்பட்டுள்ளது.

கோபி ஒரு பார ஊர்திச் சாரதியாக கொழும்பில் உரு மறைந்து வாழ்ந்துள்ளார். தெஹிவளையில் உள்ள எவ்ரிடே என்ற வெதுப்பகமே விடுதலைப் புலிச் செயற்பாட்டாளர்களின் இரகசிய செயற்பிடமாக விளங்கியுள்ளது. அவ் வெதுப்பகத்தில் பொறுப்பாளராக தம்பியையா பவானந்தன் செயற்பட்டுள்ளார். அங்கு இருந்தபடியே தெஹிவளை பாலத்தின் ஊடாகப் பயணிக்கும் முக்கியமானவர்களின் விபரங்கள் திரட்டப்பட்டுள்ளன. முக்கியமான ஒரு அதிதியைக் குறிவைத்தே இவர்களது தகவல் திரட்டுதல்கள் அமைந்திருந்தன. கோபியிடம் இருந்திருக்கலாம் என எதிர்பார்க்கப்படும் வரைபடமொன்றில் ஆயுதங்கள் பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் இடங்கள் குறிக்கப்பட்டிருந்திருக்கலாம்.

ஆனால் தற்போது அரசால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களால் வடக்கின் நில அமைப்பில் பாரிய மாறுதல்கள் ஏற்பட்டிருப்பதால் கோபியால் சரியாக புதைக்கப்பட்டுள்ள இடங்களைக் கண்டு பிடிக்க முடியாமல் போயிருக்கலாம். அதனையடுத்த புவிசார் அடையாள முறைமை (ஜீபீஎஸ்)யில் நிபுணத்துவம் கொண்டு ஒருவரை கோபி கிளிநொச்சியில் சந்தித்து அவர் ஆதரவுடன் அவ்விடங்களைக் கண்டு பிடித்துள்ளார்.

கோபியின் நெருங்கிய நண்பரான பாரஊர்தி ஓட்டுனர் அப்பன் கோபியுடன் நெருங்கிச் செயற்பட்டுள்ளார். அவரிடம் கையளிக்கப்பட்ட நான்காவது மிதிவெடி கண்டு பிடிக்கும் கருவியை அவர் கிளிநொச்சி தருமபுரத்தில் உள்ள படப்பிடிப்பு நிலையமான லிங்கம் ஸ்ரூடியோவில் பொதியிட்டு வைத்துள்ளார். சந்தேகத்திற்கிடமான பொதியொன்று லிங்கம் ஸ்ரூடியோவில் இருப்பதைத் தெரிந்து கொண்டு புலனாய்வாளர்கள் அதனைக் கைப்பறியதுடன் ஸ்ரூடியோ உரிமையாளரிடம் விசாரணைகளை மேற்கொண்ட போது அப்பனால் இப் பொதி தரப்பட்டதாகத் தெரிவித்த அவர் அப்பன் அடிக்கடி ஜெயகுமாரியின் விட்டிற்குச் செல்வதையும் தெரிவித்தார்.

அதனையடுத்து ஜெயக்குமாரியின் வீட்டிற்கு ஸ்ரூடியோ உரிமையாளரின் மனைவியை புலனாய்வாளர்கள் அனுப்பியுள்ளனர். அங்கிருந்து திரும்பிய அப் பெண் ஜெயக்குமாரியின் வீட்டில் அப்பன் இல்லை என்பதைத் தெரிவித்ததுடன் இன்னுமொரு புதியவர் அங்கிருப்பதை உறுதிப்படுத்தினார். அப் பெண்ணிடம் காட்டப்பட்ட புகைப்படங்களில் இருந்து அவ்வீட்டில் கோபி இருப்பதை உறுதிப்படுத்தினார் அப்பெண். அவரைக் கைது செய்யக் காவல்துறையினர் ஆயுதங்கள் ஏதுமின்றி ஜெயக்குமாரியின் வீட்டிற்குச் சென்றனர். அங்கு மறைந்திருந்த கோபி காவல்துறையினரில் ஒருவரின் காலைச் சுட்டு விட்டுத் தப்பியோடியுள்ளார்.

அதைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட ஜெயக்குமாரி அப்பனே தனக்கு கோபியை அறிமுகஞ்செய்ததாகக் கூறியுள்ளார். அப்பனுக்கும் ஜெயக்குமாரிக்கும் எவ்வாறு தொடர்பு வந்தது.....? ஜெயக்குமாரியின் இறந்த கணவரின் நண்பனே அந்த அப்பன். அப்பன் தருமபுரத்தில் உள்ள ஜெயக்குமாரியின் வீட்டிற்கு அடிக்கடி வருவதுடன் பாரஊர்தியில் வரும் வேளைகளில் அங்கேயே தங்கிவிடுவதும் உண்டு. ஜெயக்குமாரி கணவன் இறந்தபின் தனது வாழ்வை நடாத்த சிரமப்பட்டுக்கொண்டிருந்தார். அதன் பின்னர் அவர்கள் மூவரினதும் மறைவிடங்கள் தெரியவரவே சுற்றிவளைப்பும் சுட்டுக் கொல்லுதலும் நிகழ்ந்தது. கோபியின் திட்டம் வெற்றிகொள்ளப்பட்டது. (நன்றி - சண்டே லீடர், பாதுகாபப்பு அமைச்சின் இணையத்தளம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலி வேட்டையின் ஓட்டைகள்

கே. சஞ்சயன்

வடக்கிலும் கிழக்கிலும் கிட்டத்தட்ட ஒரு மாதகாலமாக நீடித்த புலிவேட்டை, மூன்று பேரின் மரணங்களுடன் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

மார்ச் மாத தொடக்கத்தில் பளைப் பகுதியில் விநியோகிக்கப்பட்டதாக கூறப்படும் துண்டுப்பிரசுரங்களுடன் தான் இந்தப் புலிவேட்டை ஆரம்பிக்கப்பட்டது.

முதலில் கோபி என்ற செல்வநாயகம் கஜீபனைத் தேடுவதாக பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு அறிவித்தது. அடுத்தடுத்த நாட்களிலேயே கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் அவரைச் சுற்றிவளைத்தபோது, பொலிஸ் அதிகாரி ஒருவரைச் சுட்டுவிட்டு கோபி தப்பிச் சென்றுவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக ஜெயக்குமாரி என்ற பெண்ணும் அவரது மகள் விபூசிகாவும் பிடிக்கப்பட்டனர். இதனுடன் தேடுதல் வேட்டைகளும் சுற்றிவளைப்புகளும் இராணுவக் கெடுபிடிகளும் ஆரம்பித்தன.

அத்துடன் கோபியுடன், அப்பன் என்ற நவரட்ணம் நவநீதனும் தேடப்படுவதாக அறிவிக்கப்பட்டது. அதன் பின்னர், தேவியன் எனப்படும் சுந்தரலிங்கம் கஜீபன் என்பவரையும் தேடுவதாக அறிவிக்கப்பட்டது.

இந்த மூவரினதும் புகைப்படங்களுடனான சுவரொட்டிகளும் துண்டுப்பிரசுரங்களும் ஆயிரக்கணக்கில் வெளியிடப்பட்டன. ஒவ்வொருவரினது தலைக்கும் இலட்சக்கணக்கான 'ரூபா விலையும் மதிக்கப்பட்டது.

கிட்டத்தட்ட ஒரு மாதகாலமாக நடந்த இந்தத் தேடுதல் வேட்டைகள், சோதனைகள், விசாரணைகளின் விளைவாக 10 பெண்கள் உள்ளிட்ட 65 பேர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களில் பலரும் சந்தேக நபர்களின் தாயார் அல்லது மனைவி அல்லது வேறு உறவினர்களாக இருந்தனர்.

இவற்றின் மூலம் கிட்டத்தட்ட வடக்கு, கிழக்கில் ஐந்து வருடங்களுக்கு முந்திய அச்சம் நிறைந்த ஒரு போர்ச் சூழ்நிலை மீளவும் உருவாக்கப்பட்டது.

கடந்த 11ஆம் திகதி நெடுங்கேணிக்கு தெற்கே சுமார் 15 கிலோமீற்றர் தொலைவில் உள்ள வெடிவைத்தகல்லு காட்டுப்பகுதியில் தேடப்படுவதாக அறிவிக்கப்பட்ட கோபி, அப்பன், தேவியன் ஆகியோர் சுட்டுக்கொல்லப்பட்டதுடன், இந்த வேட்டை முடித்துவைக்கப்பட்டது.

இந்த ஒரு மாதகாலத்தில் நடந்த எல்லாச் சம்பவங்களுமே நிறையக் கேள்விகளையும் சந்தேகங்களையும் மக்களின் மனங்களில் எழுப்பியிருக்கிறது.

ஏனென்றால், எல்லாமே சர்ச்சைக்குரிய வகையில் தான் நடந்து முடிந்திருக்கின்றன. பல சம்பவங்கள் இடம்பெற்ற சூழலும் அவற்றின் பின்னால் உள்ள மர்மங்களை துலக்க அரச தரப்போ, படைத் தரப்போ முன்வராததும் அவை நியாயப்படுத்தப்பட்ட விதமும் இந்தச் சர்ச்சைகளுக்கும் சந்தேகங்களுக்கும் காரணமாகியுள்ளன.

இந்தப் புலி வேட்டையின் ஊடாக அரசாங்கம், விடுதலைப் புலிகள் மீள ஒருங்கிணைய் முனைகிறார்கள் என்ற செய்தியை உள்நாட்டிலும் வெளியுலகிலும் பரப்பியது.

இறுதியில் அந்த முயற்சியை தாம் முறியடித்து விட்டதாகவும் இனியொருபோதும் புலிகளை ஒருங்கிணைய விடமாட்டோம் என்றும் அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

மீண்டும் புலிகள் ஒருங்கிணைய முயன்றனர் என்ற அரசாங்கத்தின் அறிவிப்பில் ஏகப்பட்ட கேள்விகள் இருக்கின்ற நிலையில், இதனை வைத்து அரசாங்கம் தனக்குத் தேவையான பல காரியங்களை நிகழ்த்தியிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

இந்தப் புலி வேட்டையை வைத்து அரசாங்கம், வடக்கில் படையினர் நிலைகொண்டிருப்பதை ஜெனீவாவில் நியாயப்படுத்தியுள்ளது. புலிகள் மீள ஒருங்கிணைய முனைகிறார்கள் என்ற சாக்கில் வெளிநாடுகளில் இயங்கும் அமைப்புகளையும் தனி நபர்களையும் தடைசெய்துள்ளது.

தமது சந்தேக வளையத்துக்குள் இருந்தவர்களையெல்லாம் பிடித்து தடுத்துவைத்துள்ளது அல்லது விசாரணைக்குட்படுத்தியுள்ளது. மீண்டும் புலிகள் என்ற பூச்சாண்டியை காட்டி தெற்கிலுள்ள மக்களையும் திசை திருப்பி தேர்தலில் வாக்குகளைக் கவர முயன்றது.

மீளவும் வடக்கிலுள்ள மக்களை அச்சுறுத்தி அடக்கி வைப்பதில் வெற்றி கண்டுள்ளது. புலிகள் இயக்கத்தையோ அல்லது அது போன்ற ஒரு அமைப்பையோ உருவாக்க முனைந்தால் இது தான் கதி என்ற தெளிவான செய்தியை எடுத்துக் கூறியுள்ளது. இப்படியாகப் பல காரியங்களை அரசாங்கம் சாதித்துள்ளது.

அதுவும், ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர் நடந்துகொண்டிருக்கும்போதே, இவற்றையெல்லாம் அரசாங்கம் செய்து முடித்திருக்கிறது.

இதன் மூலம் ஜெனீவாவில் கொண்டுவரப்படும் தீர்மானங்களைப் பற்றியெல்லாம் கவலைப்படவில்லை என்ற செய்தியையும் இலங்கை வெளிப்படுத்தியதாகவே பலரும் கருத்து வெளிப்படுத்தியுள்ளனர்.

அதாவது ஜெனீவாவில் கொண்டுவரப்படும் தீர்மானங்கள், இலங்கையை ஜனநாயக வழிக்குக் கொண்டுவரும் என்ற மேற்குலகின் நம்பிக்கைக்கு முரணாக நடந்துகொண்டதன் மூலம், தாம் புறநடையாகவே செயற்பட விரும்புகிறது என்ற தகவலையும் அரசாங்கம் எடுத்துக் கூறியுள்ளது.

மிகவும் முக்கியமான இந்தக் காலகட்டத்தில் அரசாங்கம் நடத்திய புலி வேட்டைக்கு நெடுங்கேணிக் காட்டில் முடிவு கட்டப்பட்டுள்ளது. இந்தப் புலிவேட்டை முடித்து வைக்கப்பட்ட சூழலும் அது நடந்த விதமும் பலத்த கேள்விகளைத் தோற்றுவித்துள்ளன.

நெடுங்கேணிக்கு தெற்கே 15 கிலோமீற்றர் தொலைவில் சேமமடுக்குளம் நோக்கிச் செல்லும் வீதியில் அமைந்துள்ள வெடிவைத்தகல்லு என்ற இடத்தில் தான் இந்தப் புலி வேட்டையின் உச்சக்கட்டம் இடம்பெற்றது.

கடந்த 11ஆம் திகதி அதிகாலையில் பொதுமக்கள் எவரும் வசிக்காத இந்த இடத்திலுள்ள அடர்ந்த காட்டுக்குள் கோபி, அப்பன், தேவியன் ஆகிய மூவரும் படையினரின் சுற்றிவளைப்பிலிருந்து தப்பிச்செல்ல முயன்றபோது சுட்டுக்கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

அதற்கு முதல் நாள் 10ஆம் திகதி காட்டுப்பகுதியில் உணவும் மருந்துப்பொருட்களும் உடைகளும் அந்தக் காட்டுப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தே அந்த தேடுதல் நடத்தப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு கூறியது.

சுமார் 3,000 படையினர் அந்தக் காட்டுப்பகுதியைச் சுற்றிவளைத்தபோது, அதிகாலையில் அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அவர்களுடன், லான்ஸ் கோப்ரல் கமல்ராஜா என்ற ஒரு தமிழ் இராணுவப் புலனாய்வு அதிகாரியின் சடலமும் பதவியா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது.

முதலில் கோபி உள்ளிட்டோரைத் தேடும்போது நடந்த மோதலிலேயே அவர் கொல்லப்பட்டதாக தகவல்கள் வெளியாகின. ஆனால், பின்னர் பாதுகாப்பு அமைச்சு, அவர் வவுனியா வடக்கில் வேறோரு பயிற்சியின்போது தவறுதலாக மற்றொரு சிப்பாயின் துப்பாக்கி வேட்டுக்கு இலக்காகியே அவர் மரணமானதாக கூறியது.

எவ்வாறாயினும், வெலிஓயா என இப்போது அழைக்கப்படும் மணலாற்றுக் காட்டுப்பகுதியில் நடந்த இந்த நான்கு உயிர்ப் பலிகளும் ஒன்றுடனொன்று தொடர்புபட்டதாகவே சந்தேகிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக சுதந்திரமாக செய்திகள் சேகரிக்க ஊடகங்கள் அனுமதிக்கப்படவில்லை.

பதவியா மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்ட நால்வரினது உடல்களும் அநுராதபுரத்துக்கு கொண்டுசெல்லப்பட்டு அங்கேயே பிரேத பரிசோதனைகள், மரண விசாரணைகள் எல்லாம் நடத்தப்பட்டு இரகசியமாகவே அவை அடக்கமும் செய்யப்பட்டன.

நெடுங்கேணிக் காட்டில் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்ட படையினர் பற்றிய படங்களை வெளியிட்ட படைத்தரப்பு, கொல்லப்பட்ட எவரது படத்தையும் வெளியிடவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

அது மட்டுமன்றி, சித்திரைப் புத்தாண்டுக்காக பிரதான அச்சு ஊடகங்கள் எல்லாமே ஞாயிற்றுக்கிழமைக்கான வெளியீடுகளை வெள்ளியன்றே அச்சிட்டுவிட்டு விடுமுறைக்காக மூடப்படும் சூழலில் தான் இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றன.

இதன் மூலம் அச்சு ஊடகங்கள் இந்தச் சம்பவங்கள் குறித்து கேள்விகளை எழுப்பவோ, சந்தேகங்களை கிளப்பவோ அல்லது சில இரகசியங்களை அவிழ்த்து விடவோ முடியாத நிலையிருந்தது.

இவையெல்லாவற்றையும் ஒருங்கிணைத்துப் பார்த்தால், பல விடயங்கள் அம்பலத்துக்கு வருவதை அரசாங்கமும் படைத்தரப்பும் விரும்பவில்லை என்பதை உணர்ந்துகொள்ள முடியும்.

கோபியின் உடலை அவரது மனைவி, தாய் அடையாளம் காட்டியதாக பொலிஸ் தரப்பில் கூறப்பட்டபோதும், ஏனைய இருவரினதும் உடல்களை யார் அடையாளம் காட்டினர் என்ற விபரம் வெளியிடப்படவில்லை.

எதற்காக அரசாங்கம் அவசர அவசரமாக இவர்களின் உடல்களை அடக்கம் செய்ய நடவடிக்கை எடுத்தது என்பதும் சந்தேகத்துடனேயே நோக்கப்படுகிறது.

அது மட்டுமன்றி, புலிகள் இயக்கத்தை மீள ஆரம்பிக்க முயன்றதாக கூறப்பட்ட மூவரும், தம்மைப் படையினர் தேடுகிறார்கள் என்று தெரிந்ததும், வெடிவைத்தகல்லு காட்டுக்குள் போய் ஒளிந்துகொள்ள வேண்டிய தேவை என்ன என்ற கேள்வியும் உள்ளது.

குடிமனைகளை அண்டிய காடுகளில் ஒளிந்திருந்தால் தான், அவர்களுக்குத் தேவையான எதையும் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால், குடிமனைகளற்ற காட்டில் அவர்களுக்கு எங்கிருந்து உணவு கிடைக்கும் என்பதைவிட, அதன் மூலம் அவர்கள் எதையுமே சாதிக்கவும் முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், கொல்லப்பட்ட மூவரும் புலிகள் இயக்கத்தை மீள ஒருங்கிணைக்க முயன்றதாக கூறப்பட்டாலும், அவர்கள் தப்பிச்செல்ல முயன்றபோது ஏன் கைதுசெய்ய முயற்சிக்கவில்லை?

அவர்கள் படையினருடன் சண்டையிட்டுக்கொண்டு தப்பிச்செல்ல முயன்றதாகத் தெரியவில்லை.

ஏனென்றால், கொல்லப்பட்ட பின்னர் அவர்களிடமிருந்து ஒரேயொரு கைத்துப்பாக்கியையும் இரண்டு கைக்குண்டுகளையும் மீட்டதாகத் தான் படைத்தரப்பு கூறியுள்ளது. 3,000 படையினருக்கு முன்பாக இந்த ஆயுதங்களால் எதையும் சாதிக்க முடியாது. நிச்சயமாக படையினர் நினைத்திருந்தால், மூவரையும் உயிருடன் பிடித்திருக்கலாம்.

ஆனால், ஒரேயொரு துப்பாக்கியுடன் இருந்தவர்களை சுட்டுக்கொன்றது ஏன் என்ற கேள்வியும் உள்ளது.

உயிருடன் பிடித்திருந்தால் தான், புலிகள் இயக்கத்தை மீள ஆரம்பிக்க உதவியவர்கள் பற்றிய எல்லா விபரங்களையும் படைத்தரப்பினால் திரட்ட முடிந்திருக்கும்.

அத்தகைய வாய்ப்பைக் கெடுக்கும் வகையில் மூவரையும் சுட்டுக்கொன்று விட்டதாக மார்தட்டிக்கொள்வது எந்த வகையிலும் கிளர்ச்சி அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் ஒரு இராணுவத்தினது புத்திசாலித்தனமான அணுகுமுறையாக இருக்க முடியாது.

அதாவது இன்னொரு போராட்டத்தின் வேர்களை அழிக்க அரசாங்கம் நினைத்திருக்குமேயானால், இந்தக் கொலைகள் நிகழ்ந்திராது.
அது மட்டுமன்றி, இந்தக் கொலைகள் நடந்த சமநேரத்திலேயே, கிட்டத்தட்ட அதே பகுதியில் இராணுவ அதிகாரி ஒருவரும் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டதும் சந்தேகங்களை வலுப்படுத்துகிறது.

அதுவும், சாதாரண படையினர் என்றால் பரவாயில்லை. இராணுவப் புலனாய்வு அதிகாரியாக இவர் இருந்தது தான் இன்னும் அதிக குழப்பத்தை ஏற்படுத்துகிறது.

இந்தப் புலிவேட்டை தொடங்கப்பட்டபோதே, இது வெறும் புரளி என்றும் நாடகம் என்றும் ஊடகங்கள் பலவும் செய்திகளை வெளியிட்டன. அதாவது, அரசாங்கம் வடக்கில் படையினரை நிறுத்தி வைத்திருப்பதை நியாயப்படுத்திக்கொள்வதற்காகவே இவ்வாறு நாடகமாடுவதாக விமர்சனங்கள் வந்து கொண்டு தான் இருக்கின்றன.

அத்தகைய விமர்சனங்களின் மீதுள்ள நியாயங்களை சற்றும் புறமொதுக்கித் தள்ளிவிட முடியாது. ஏனென்றால், இந்தப் புலி வேட்டையில் அந்தளவுக்கு ஓட்டைகள் இருந்தன.

இது புலிகளின் மீண்டெழும் முயற்சி என்றும் அதை அடக்கிவிட்டதாகவும் அரசாங்கம் கூறிக்கொண்டாலும், அதனை எந்தளவு மக்கள் நம்புகிறார்கள் என்பது கேள்வி தான்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அரசாங்கத்தின் இந்தக் கதை தம் மீதான அழுத்தங்களை அதிகரிப்பதற்கான உத்தி என்றே கருதுவதாகத் தெரிகிறது.

அந்த வகையில் இந்தப் புலி வேட்டை தமிழ் மக்களுக்கு அச்சத்தைக் கொடுத்துள்ளது மட்டுமன்றி, அரசாங்கம் மற்றும் படையினரின் நடவடிக்கைகள் மீது அவநம்பிக்கை கொள்ளவும் காரணமாகியுள்ளது.

இந்தப் புலி வேட்டையை தொடர்ந்து நடத்துவது, வடக்கின் அமைதியை முற்றாகவே சீர்குலைத்து விடும் ஆபத்தையும் அரசாங்கம் உணர்ந்தேயிருந்தது.

அதனால், புலி வேட்டையை நெடுங்காலத்துக்கு நீடிக்க முடியாது என்பது அரசாங்கத்துக்கு தெரியும். அதனால் தான் மூவரையும் சுட்டுக்கொன்றதுடன், புலி வேட்டைக்கு முடிவு கட்டப்பட்டுள்ளது.

இனிப் பெரியளவில் தேடுதல்களையோ, சுற்றிவளைப்புகளையோ படையினர் நடத்த முனையமாட்டார்கள். ஆனால், இராணுவத்தின் இருப்பில் எந்த மாற்றமும் இருக்காது.

இனிமேல் வடக்கிலிருந்து படையினர் அகற்றப்பட வாய்ப்பில்லை என்பதை அமைச்சர் மஹிந்த சமரசிங்கவினது கருத்தும் உறுதிப்படுத்துகிறது.
உண்மையில் புலிகள் இயக்கத்துக்கு மீளுயிர் கொடுக்கும் முயற்சிகள் நடந்ததா என்பதை உறுதிப்படுத்த அந்த மூவரும் உயிரோடு இல்லை.

எனவே, அரசாங்கத்தின் கதையை நம்ப முடியாதவர்களும் நம்பித்தான் ஆகவேண்டிய கட்டாயம் உள்ளது.

அதேவேளை, நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கு புலி வேட்டை தடையை உருவாக்கும் என்பதால், அது சர்வதேச அளவில் சிக்கலைக் கொடுக்கும் என்பதால், அதை ஆரம்பித்து வைத்தவர்களே அதற்கும் முடிவு கட்டிவிட்டனர்.

எவ்வாறாயினும், போர் முடிவுக்கு வந்த பின்னர், நடந்துள்ள நான்கு துப்பாக்கிச் சூட்டு மரணங்களினதும் எல்லா உண்மைகளும் வெளிச்சத்துக்கு வரப்போவதில்லை. ஏனென்றால், உண்மைகளை வெளிக்கொண்டு வரும் வகையில் இந்த மரணங்கள் எதுவும் நிகழவில்லை.

உண்மைகள் வெளிவரக்கூடாது என்பதால் தான், ஆளரவமற்ற நெடுங்கேணியின் தெற்குப் புறக் காடுகள் இதற்கான களமாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கலாம்.

நன்றி - தமிழ்மிரர்

## யாரெல்லாம்
# காற்றுள்ள போது தூற்றுகிறார்கள்

திருமணமாகியதன் பின்னர் கூட அவனுக்கு உகந்ததோர் தொழில் கிடைக்கவில்லை. அதனால் முதலீடு இல்லாத ஒரு தொழிலை தேடினான். அவ்வேளையில் அவன் தேர்ந்தெடுத்த தொழில் சீட்டுத் தொழிலாகும். நேர்மை என்பது அவனிடம் அறவே இல்லாததால் அத்தொழில் அவனுக்கு பொருத்தமாக அமைந்தது.



எப்படியோ அப்பகுதியில் முக்கால்வாசிப் பேரை ஏமாற்றி காலத்தை கச்சிதமாக கழித்து விட்டான். வாழ்க்கைச் செலவு வானளவு உயர்ந்து செல்லும் பொழுது அவனால் அச் செலவுடன் தவழ்ந்து கூட செல்ல முடியவில்லை. அவனது குடும்ப எண்ணிக்கை வருடா வருடம் அதிகரித்து செல்வதே அதற்கான காரணமாகும்.

அதனால் வேறொரு பிரதேசத்திற்குச் சென்று அங்கு நிரந்தரமாக வாழ முடிவு செய்தான். கிழக்கு மாகாணத்தில் ஒரு பிரதேசத்தை தேர்ந்தெடுத்து வாடகை வீடொன்றில் குடும்பத்துடன் குடியமர்ந்தான். அங்கு உடனடியாக வேலை தேடிக்கொள்வது அவனுக்கு கஷ்டமாக இருந்ததினால் சீட்டுத் தொழிலையே தொடர்ந்து செய்ய முடிவெடுத்தான்.

குள்ளத்தனத்திற்கு பெயர் போன அவன் அங்கு பலருக்கு நெருங்கிய நண்பனானான். அவனிடம் நல்ல பேச்சுத்திறமை இருந்ததினால் குறுகிய காலத்தினுள் மூலதனமில்லாத சீட்டுத் தொழிலை பிரபல்யமடையச் செய்தான். அப்புதிய பிரதேசத்தில் தனக்கென்று ஒரு அடையாளத்தை ஏற்படுத்த பல பிரயத்தனங்களை மேற்கொண்டான்.

மேலும் அங்குள்ள சைவ ஆலயப்பணிகளில் ஈடுபட்டு, தான் ஒரு சிறந்த பக்தன் என்பதனை சகலருக்கும் வெளிப்படுத்தினான். அவனது சீட்டுத் தொழிலில் கிடைக்கும் ஆதாயம் போதுமானதாக இல்லாததால், எப்படியோ அப்பகுதி பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் ஊழியனாக சேர்ந்து கொண்டான்.

அப்பகுதியில் பிறந்து வளர்ந்தவர்களுக்கே சொந்தமாக வீடு, காணி, வாகனம் இல்லாமல் இருக்கும் போது மிக குறுகிய காலத்தினுள் அவை அனைத்தையும் அவன்



அடைந்துவிட்டான் அங்கு உள்ளவர்களில் பலர் இறக்கும் வரை இரவல் வீட்டில் வாழ்ந்து வருவது தான் வழமை. 'சொந்த ஊரிலே சோம்பேறிகளாக வாழ்பவர்கள் மத்தியில் ஒரு வந்தான் வரத்தான் எப்படியோ சாதித்து விட்டான்' என பலர் அங்கு பெருமையாக பேசிவருவார்கள்.

'தவளையைப் பிடித்து தண்ணீர் நிரம்பிய கிணற்றுக்குள் போட்டது' போன்று அவனது வாழ்வில் சிறந்ததொரு மாற்றம் ஏற்பட்டது. தற்பொழுது அவன் ஒரு சாதாரண ஊழியனல்ல. அவன் அங்குள்ள எரிபொருள் நிலையத்தின் கிளை முகாமையாளன். அந்த நிலையம் கூட கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் இயங்கும் ஒன்றாகும்.

அச்சங்கம் கிழக்கு மாகாணத்தில் மிகச் சிறந்த சங்கமாக அன்று விளங்கியதால் அரசாங்கம் அதை பாராட்டி பல விருதுகளை வழங்கியிருந்தமை மிக குறிப்பிடத்தக்கது. அந்நிலைமைக்கு காரணம் அன்றிருந்த பொது முகாமையாளரின் விசேட திறமையென சுட்டிக்காட்டப்பட்டதுடன் புலமை பரிசு மூலம் அவர் ரஷ்யாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டதை இங்கு நினைவுகூறுதல் மிகமுக்கிய தொன்றாகும்.

அந்தப் பொது முகாமையாளர் பல கோணங்களில் பாராட்டப் பட்டிருந்தாலும் அவரின் அகால மரணத்தின் பின் பல திடுக்கிடும் மர்ம தகவல்கள் வெளிக்கிளம்பியமை பற்றியும் சுட்டிக் காட்டாமல் இருக்கமுடியாது. இரகசிய அரிசிக் கொள்வனவில் ஏற்பட்ட சர்ச்சையினால் இனம் தெரியாத நபரொருவரின் அசீட் வீச்சுக்கு உள்ளாகி சிகிச்சை பயனளிக்கத் தவறியதால் அன்று அவர் இறுதிமூச்சை விட நேர்ந்தது.

அன்று மட்டுமல்ல இன்று கூட குறிப்பிட்ட சங்கத்தில் பல திடுக்கிடும் மர்மச் சம்பவங்கள் இடம்பெற்ற வண்ணமே உள்ளன. ஆனால் பூனைக்கு மணிகட்டுவது யார்? என்பதே இன்றைய வினாவாக உள்ளது. சமூக சேவை செய்ய ஆளுக்கால் முட்டி மோதி, திருட்டுத்தனமாக சங்கத் தேர்தலில் ஜெயித்து எப்படியோ நிர்வாகத்திற்குள் ஊடுருவி விடுகிறார்கள். ஆனால் இதுவரை இடம்பெற்ற, இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற ஊழல், மோசடி, சீர்கேடு ஆகியனவைகள் தொடர்பாக எந்தவித நடவடிக்கைகளும் முடுக்கிவிடப்பட்டதாக தெரியவில்லை.

'கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்பது போன்று 'கள்வர்கள் காலடி எடுத்து வைக்கும் இடமெல்லாம் காசு மழை கொட்டோ கொட்டுகின்றது. அதை யாரால் தடுக்கமுடியும்?

சொந்த ஊரை விட்டு பிழைப்புத் தேடி இன்னுமொரு இடத்திற்குச் சென்றாலும் சங்கத்தின் எரிபொருள் நிலையம் ஊடாக இறைவன் அவனுக்கு கிள்ளிக் கொடுக்கவில்லை. கைநிறைய அள்ளியே கொடுத்து வந்தார். பாதுகாப்பு படையினரின் சகல நடவடிக்கைகளும் கட்டவிழ்த்து விடப்பட்ட காலத்தை எவரும் எளிதில் மறந்து விட முடியாது.

அன்று அவசரகாலச் சட்டமும், ஊரடங்குச் சட்டமும் இரட்டைக் குழந்தைகளாக செயல்பட்ட காலம் அது, பலருக்கு பல வாய்ப்புக்களை வழங்கத் தவறவில்லை. அன்று எரிபொருள் நிரப்பச் செல்லும் படையினரின் வாகனங்கள் தொடர்பில் பணத்திற்குப் பதிலாக ஏதோ விபரங்கள் எழுதப்பட்ட வெறும் கடதாசித் துண்டுகளையே பணமாக கருத வேண்டியிருந்தது.

அந்தக் கிளை முகாமையாளருக்கு திருட்டைப் பற்றி பாடம், அல்லது செயலமர்வு நடத்தவா வேண்டும்! 'சுருட்ட வேண்டியவற்றை சுருட்டிக் கொள்' என்ற கட்டளையை அவன் உதாசீனப்படுத்தவில்லை. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளவும் அன்று அவன் தவறவில்லை.

வன்செயல் காலங்களில் அமுல்படுத்தப்பட்ட 'அத்தியாவசியச் சேவை' அன்று பலருக்கு மிக மிக அத்தியாவசியமாக இருந்தது. நிலைமை சீரடையவே எங்கும் இயல்பு வாழ்க்கை ஏற்பட்டதையடுத்து வழமையான கணக்கெடுப்பு, கணக்காய்வு, திடீர் பரிசீலனை, விசாரணை, அனைத்தும் ஒன்றன் பின் ஒன்றாக இடம்பெற்றதையடுத்து அந்தக் கிளை முகாமையாளன் வீட்டுக்கு அனுப்பப்பட்டான்.

எத்தனை காலத்திற்குத் தான் தொழிலின்றி அவஸ்தைப்படுவது? வேதாளம் மீண்டும் முருங்க மரத்தில் ஏறியது போன்று தனது சீட்டுத் தொழிலை மீண்டும் ஆரம்பித்து எப்படியோ கஞ்சி, கூழுடன் காலத்தைத் கழித்தான். என்னவாக இருந்தாலும் இருட்டுக்குப் பின் வெளிச்சம் தோன்றுவது போன்று அவனது வாழ்வில் மீண்டும் ஒளிக்கீற்றுக்கள் எழ ஆரம்பித்தன.

அன்று இலங்கை அரசியலமைப்பின் 13வது திருத்தச் சட்டத்திற்கமைய இந்தியாவின் ஆசீர்வாதத்துடன் வடக்கு கிழக்கு மாகாண சபை கிழக்கு மாகாணத்தில் அமர்க்களமாக அமைக்கப்பட்டது. அந்த மாகாண சபையில் அங்கம் வகித்தவர்கள் புலிகள் அமைப்புக்கு எதிரான தமிழ் இயக்கங்களே. மாகாண சபை நிர்வாகத்தில் பல வெற்றிடங்கள் இருந்தாலும் புலிகளுக்கு அஞ்சி பலர் வேலை தேடிப் போகவில்லை. எப்படியோ கூட்டுறவுச் சங்கத்தினால் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்ட அவன் அன்றைய தமிழ் இயக்கங்களின் கையில் காலில் விழுந்து பதிப்பகத் திணைக்களத்தில் தனது குறைந்த கல்வித் தகமையைவிட கூடிய பட்ச தகமைகொண்ட பதவியை பெற்றுக்கொண்டான்.

**...நாட்டு நடப்பு...**

அன்று அங்கிருந்த போராளிக் குழுக்களுக்கு சிவில் நிர்வாகம் மிக மிக பூச்சியம் என்பதால் அவன் தனது வழமையான திருட்டு ஆட்டத்தை மிக கச்சிதமாக அரங்கேற்றினான். அவனது இசைக்கு ஒத்து ஊத இன்னும் சில திருகுதாளக் கும்பல்களை உள்வாங்கிக் கொண்டான். 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' என்பதை அவன் அறியத் தவறியதால் அவனது ஆட்டத்தை அடக்க ஆண்டவன் தகுந்த ஆசான் ஒருவரை பதிப்பகத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தார்.

ஒப்பு நோக்காளர் எனும் பதவியை வகிக்க வந்த அப்புதியவர், ஓரிரு நாட்களுக்குள் அவனின் அட்டகாசத்தை அடக்கி விட்டார். பதிப்பகத் திணைக்களம் இழுத்து மூடப்பட்டு வேறு ஒரு நிறுவனத்திற்கு பாரமளிக்கப்பட்டது. அங்குள்ள ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டு ஏனைய அலுவலகங்களுக்கு இடமாற்றப்பட்டனர். அட்டகாசக்காரனான அவனும் கல்வி அமைச்சுக்கு சாதாரண லிகிதராக இடமாற்றப்பட்டான். எனினும் அத்தொழிலை தொடர மனமில்லாததால் ஓய்வு பெற்றுக் கொண்டான். அவனது 'அலிபாபா' வேஷமும் கலைந்தது.

ஒப்பு நோக்காளருக்கும், ஆளுணருக்கும் இடையில் இருந்த நெருக்கத்தினால் சகலதும் இனிது



நிறைவேறியதுமல்லாமல், அவரின் நேர்மையையும், திறமையையும், நன்கறிந்த ஆளுநர் தனது செயலகத்திலே அவரை பக்கத்தில் வைத்துக்கொண்டார். பதிப்பகத் திணைக்களத்தில் சகல ஊழல், மோசடி சீர்கேடு ஆகியவற்றுக்கு உடந்தையாக இருந்த அவன் ஒரு தடவை ஒப்பு நோக்காளரை பணி இடைநீக்கம் செய்வதற்கு பாரிய பிரயத்தனம் எடுத்தமைக்கான விளைவே சகலதுக்கும் காரணம்.

எரிபொருள் நிலையத்தில் அவன் அன்று பணியாற்றும் போது மோசடி செய்த பணம் தொடர்பாக இதுவரை சங்கம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதைப்போன்று இலட்சக்கணக்கான ஏனையவர்களின் நிலுவைகளும் மீளப் பெற நடவடிக்கை எடுக்கவில்லை. பலர் சங்கப் பணத்தை கையாண்டுவிட்டு வெளிநாட்டில் சுகபோகமாக வாழ்க்கையை அனுபவிக்கின்றனர். வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் தத்தமது வாகனங்களுக்கு இலவசமாக எரிபொருள் நிரப்புவதற்காகவே இன்று பலர் சங்க நிர்வாகத்திற்குள் நுழைந்துள்ளனர். திருடர்களாகப் பார்த்து திருந்தினால் மட்டுமே திருட்டுக்களை ஒழிக்கலாம்.

முற்றும்...


– பாலையூத்றான் –

## அமெரிக்காவில் இளம்பெண் கைது

அமெரிக்காவின் சேர்ந்த 19 வயது Dallas Archer என்ற இளம்பெண் காரில் மிக வேகமாக சென்று கொண்டிருந்தார். அவரை வழிமறித்த போலீஸார் அவரிடம் உரிய டிரைவிங் லைசென்ஸ் இல்லாததால் அவரை கைது செய்தனர். விசாரணைக்காக அவர் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றவுடன் அவரை இரண்டு பெண் காவலர்கள் பரிசோதனை செய்தனர்.

பரிசோதனையின் போது அவரது உள்ளாடைக்குள் ஏதோ மர்ம பொருள் இருப்பதை போலீஸார் கண்டுபிடித்தனர். பின்னர் அவரது ஆடை முழுவதையும் அகற்றி சோதனை செய்தபோது, அவர் தன் மர்ம உறுப்பில் லோட் செய்யப்பட்ட 22 LR revolver என்ற வகை துப்பாக்கியை மறைத்து வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த துப்பாக்கி $250 மதிப்புடையது என்று விசாரணையில் தெரியவந்தது.



மேலும் இந்த துப்பாக்கியின் உரிமையாளர் 70 வயதான கார் விற்பனை செய்பவர் எனத் தெரிய வந்தது.

## நூலிழையில் தப்பிய.. ..

Regina, Saskatchewan என்ற பகுதியை சேர்ந்த இளைஞர் Jared Frank, ரயில் வரும் தண்டவாளத்தில் நின்று தன்னைத்தானே வீடியோ எடுத்துக்கொண்டிருந்தார். மிக அருகில் வந்த ரயில், இளைஞரை மோதிவிடும் என்ற நேரத்தில் ஒருசில விநாடிகளுக்கு முன்பு ரயில் எஞ்சினில் பணிபுரியும் ஊழியர் ஒருவர் தனது காலால் அந்த இளைஞரை தள்ளிவிட்டதால், நூலிழையில் இளைஞர் உயிர் பிழைத்தார்.

இந்த அதிர்ச்சி வீடியோவை யூடியூப் இல் பதிவுசெய்து ஒரே வாரத்தில் 23மில்லியன் மக்கள் இந்த வீடியோவை பார்த்து ள்ளதுடன் கோடி கோடியாய் பணத்தைக் கொட்டிக்கொண்டு இருக்கிறது. இதுவரை மட்டும் $250,000 பணம் பெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியும் நாள் பார்த்து...

"என்னம்மா யோசனை... காசு போடுங்கம்மா... எங்களுக்கு செஞ்சா சாமிக்கு செஞ்ச மாதிரி..." என்று நாங்கள் கைதட்டி எலக்ட்ரிக் டிரைய்னில் காசு வாங்கிக் கொண்டிருந்தோம். பிச்சைதான். அந்தம்மாவுக்கு மனசு இறங்கியது. ஐந்து ரூபாயைத் தந்தார்கள். சாந்திக்கும் ஐந்து ரூபாய் தந்தார்கள். அந்தம்மாவை நெத்தியில் நெட்டை எடுத்து மனசார வாழ்த்திவிட்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்தோம்.

ஸ்டேனில் ஏறின சித்ராதான் அந்த அற்புத செய்தியை எனக்குச் சொல்லிவிட்டுப் போனாள். அவள் அதை சொன்ன போது அது எனக்கு ஒரு கனவு மாதிரி இருந்தது. எனக்கு நானே கிள்ளிப்பார்த்துக் கொண்டேன். ஆமாம் வலிக்கிறது. ஆனால் இத்தனை நாள் வலியை விடவும் இந்த வலி சுகமாய், ஆனந்தமாய் இருந்தது. சாந்தி ஆர்வம் தாங்காமல் என்னடி சொல்லு என்றாள். எதுக்கு நீயே கிள்ளிகிட்ட சொல்லு நித்யா...' என்றாள்.

'சொல்லுடீ...' சாந்தி என் கையை மீண்டும் அழுத்திக் கேட்டாள்.

'அப்பாகிட்டேயிருந்து போன். என்னை வீட்டுக்கு வரச்சொன்னாராம்... இல்லைன்னா வந்து கூட்டிட்டுப் போகட்டுமான்னாராம்...'

சொன்னதும் சாந்தி என்னை கட்டிப் பிடித்துக் கொண்டாள்.

'ஆமா... நீ இங்க இருக்கறது எப்படி தெரிஞ்சது...'

'எங்க ஊர்க்காரனை அன்னைக்கு பார்த்தேன்ல அவன்கிட்ட எதுக்கும் இருக்கட்டும்னு சித்ரா போன் நம்பர கொடுத்திருந்தேன்...'

'சரி அத விடு.. நீ வேண்டின முருகன் உன்னை கைவிடல.. போ.. போய் உடனே கிளம்பு.. எவ்வளவு பணம் வேணுமோ நான் தர்றேன்... கிளம்பு.. கிளம்பு..' என்றாள் சந்தோசமாய்.

ஆமாம் என் வேண்டுதல் பலித்திருக்கிறது. என் வீட்டோடு இருக்க நினைத்த வேண்டுதல். மறுபடியும் என் அப்பா, அண்ணன், அண்ணி, தங்கையுடன் இருக்க நினைத்த வேண்டுதல். நினைத்தாலே நெஞ்சிற்குள் சந்தோசம் ஒரு பறவை போல் பறந்தது.

எங்கள் வீட்டில் என் அண்ணனுக்குப் பிறகு நான் பிறந்தேன். இரண்டாவது ஆணாய் பிறந்தது தெரிந்து அம்மா அழுதாள். இது பெண்ணாய் இருந்திருந்தால் சந்தோசமாய் இருந்திருக்குமே என்று அப்பாவிடம் சொன்னாளாம். 'நித்யானந்த்' எனக்கு வீட்டில் வைத்த பெயர். அதற்கு இரண்டு வருடத்திற்குப் பின் பிறந்தாள் என் தங்கை. அம்மாவுக்குச் சந்தோசம் தாங்க முடியவில்லை. நாங்கள் இருந்தது எங்கள் தாத்தா வீடு. மேலே கீழே என பத்துக்கும் மேற்பட்ட அறைகள். பழையதாக இருந்தாலும் அதன் பிரம்மாண்டம் எனக்கு பிடிக்கும். என் அண்ணன் மற்றும்



தங்கையுடன் ஓடி விளையாட அது மிக வசதியாக இருந்தது. அவ்வப்போது விளையாட்டில் எங்கள் அப்பாவும் சேர்ந்து கொள்வார். அவருக்கும் கண்ணைக் கட்டி எங்களைத் தேடச் சொல்வோம். அப்பாவும் இருக்கிற தூண்களில் மோதி எங்களைத் தேடுவது சிரிப்பாய் இருக்கும். அம்மா இந்த விளையாட்டைப் பார்த்து தலையில் அடித்துக் கொள்வாள். எங்கள் வீட்டை எனக்கு குழந்தையிலிருந்தே பிடிக்கும். எங்கள் வீடுதான் எனக்கு எல்லாமே.

அரசாங்க பள்ளியில் என் பள்ளிப் படிப்பு. பள்ளிக்கூடத்தில் எனக்கு மாணிக்கமும் வெங்கட்டும் நண்பர்களாக இருந்தாலும் எனக்கு கலாவுடனும் மேனகாவுடனும் இருப்பதுதான் பிடித்திருந்தது. அவர்களுடன்தான் விளையாடுவேன். ஒரு வயதிற்கு மேல் என் நடை, என் பேச்சின் தொனி எல்லாம் மாறிக் கொண்டேயிருந்தது.? 'டே பொம்பளசட்டி' ன்னு கணேசன்தான் என்னை அடிக்கடி கிண்டலடிப்பான். அப்போது எனக்கு அது பெரிய விஷயமாகத் தெரியவில்லை. நான் ஆறாவது படிக்கறபோது எனக்குள் ஓர் உணர்வு புதியதாக தோன்றி நான் யாரென எனக்கு மட்டும் சொல்லிக் கொண்டிருந்தது. அந்த உணர்வு மாணிக்கத்துடன் கூட பாத்ரூம் போகக்கூட தடுத்துக் கொண்டிருந்தது. நித்யானந்த் என்று கூப்பிடுவதை விட 'நித்யா' என்று கூப்பிடுவது எனக்குப் பிடிக்க ஆரம்பித்திருந்தது. எனக்குள் நான் முழுமையாய்ப் பெண்ணென உணர்ந்த போது நான் விடிய விடிய அழுதேன். எனக்கு மட்டும் ஏன் இந்த நிலை? என்ன பாவம் செய்தேன்? நான் மட்டும் ஏன் இப்படி படைக்கப்பட்டேன்? விடை கிடைக்கவேயில்லை. கடவுளை இரவெல்லாம் திட்டித் தீர்த்தேன்.

சாந்தியும் என்னுடன் பல்லாவரத்தில் இறங்கிக் கொண்டாள். நான் சொல்லியும் 'கடை' கேட்க அவள் போக மறுத்தாள். ஊருக்கு நான் போகும்வரை அவளுக்கு என்னுடனேயே இருப்பதாக உச்தேசமாம். நான் மறுக்கவில்லை. மறுபடியும் ரயில் டிக்கெட் எடுத்து நாங்கள் இருக்கிற இடத்திற்கு போவதாக உத்தேசம். டிக்கெட் எடுத்து மீண்டும் ரயிலில் பயணமானோம்.

"போய் என்ன பண்ணப் போற.. நித்யா?" என்றாள் சாந்தி.

"போய் படிக்கணும். கரஸ்பாண்ட்டிங் கோர்ஸ்லயாவது ஒரு டிகிரி வாங்கணும்... எங்கப்பா நல்லவரு. இவ்வளவு மனசு மாறியிருக்காருன்னா நான் ஆசைப்படறதையும் நிச்சயம் செய்வாரு. நல்லா படிச்சு நம்மள மாதிரியான அரவாணிகளுக்கு நல்லது செய்யணும் சாந்தி... நிச்சயம் செய்வேன்.." என்றபோது சாந்தியின் கண்கள் கலங்கியிருந்தன.

பத்தாம் வகுப்பு படிக்கும்போதுதான் முதல் முதலாய் வீட்டில் மாட்டினேன். கதவைச் சாத்திக் கொண்டு என் தங்கையின் பாவாடை தாவணியை அணிந்து கொண்டேன். முகத்தில் பவுடர் அடித்து அழுத்தமாய் லிப்ஸ்டிக் பூசிக் கொண்டேன். இருந்த முல்லைப்பூவை தலையில் வைத்து கண்ணாடியில் அழகு பார்த்தபோது ஜன்னலில் அம்மா பார்த்து விட்டாள்.

"நித்யா இது என்னடா கன்றாவி..." என்று கத்தினார்கள்.

"ஐயோ கத்தாதேம்மா எங்க ஸ்கூல் ஆண்டு விழாவில நான் பொம்பள வேஷத்தில நடிக்கறேன்... அதுக்கு ரிகர்சல் பார்த்துட்டிருக்கேன்..." என்று அம்மாவிடம் ஒரு பொய் சொல்லி அன்று சமாளித்தேன். ஆனால் மனதின் ரகசியத்தை சுமக்க சுமக்க அதன் கனம் அதிகமாகிக் கொண்டே போனது. எங்காவது விழுந்தோ ஏதாவது குடித்தோ தற்கொலை செய்து கொள்ள தோன்றிக் கொண்டே இருந்தது. ஆனால் அதற்கும் தைரியம் வரவில்லை. தாங்க முடியாமல் அம்மாவின் மடியில் படுத்துக்கொண்டு ஒருநாள் கதறி அழுதேன்.

"நான் பொம்பளதாம்மா. உன்னை மாதிரி ஒரு பொம்பளதாம்மா... ஆம்பிள்ளைக்கான எந்த உணர்வும் எனக்கு இல்லம்மா.. என்னை என்னை புரிஞ்சுக்கம்மா.. நம்ம வீட்டுல பூனை கோழியெல்லாம் வளர்க்கறீங்கல்ல அதுல ஒண்ணா என்னை நினைச்சுக்கம்மா. அதுக்கு காட்டற அன்புல கொஞ்சம் எனக்கு காட்டுங்கம்மா..." என்று நான் அழ அம்மா ஒன்றும் புரியாமல் பார்த்தாள். அவள் கண்களில் நிற்காமல் கண்ணீர் வந்தது. நான் பெண்ணாய் பிறக்காததற்கு வருத்தப்பட்ட அம்மா இன்று நான் ஒரு பெண்தான் என்றதும் ஏன் அழுகிறாள்?

"யாராவது கேட்டா என்னடா சொல்றது.." என்றாள்.

ஆம்பளைன்னு சொல்வதா இல்லை பொம்பளைன்னு சொல்வதா என அம்மாவுக்குள் குழப்பம்.

"நானும் ஒரு மனிதன்னு சொன்னா போதும்மா.." என்றேன்.

வீட்டில் அனைவருக்கும் விஷயம் தெரிந்தது. அப்பா அதிர்ச்சியில் அடித்து தீர்த்தார். ப்ளஸ்டு படிக்கற என் அண்ணன் வெறுப்பாய் ஒரு பார்வை பார்த்துவிட்டுப் போனான். அந்தப் பார்வை நான் அந்த வீட்டில் இருந்தவரை மாறவேயில்லை. தங்கை புரியாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அப்பா, "விஷயம் வெளியே தெரிஞ்சா மானம் போயிடுமேடா" என்றார். என்னை குற்றம் சொல்லாதீர்கள் அப்பா. இது நான் விரும்பி ஏற்ற வேஷம் அல்ல. இது ஜீனின் குற்றம். நான் முளைத்த நிலத்தின் குற்றம். என்னைப் படைத்த இயற்கையின் குற்றம். அந்த இறைவனின் குற்றம் என்றேன். அப்பா பதில் எதுவும் சொல்லவில்லை.


அதற்குப் பிறகு அம்மா மட்டுமே ஓரளவு எனக்கு அணுசரனையாய் இருந்தாள். ஆனால் அண்ணன் என்னுடன் பேசுவதைத் தவிர்த்தான். என் தங்கை என் பக்கத்தில் வரவே பயப்பட்டாள். பயந்து பயந்தேதான் பேசினாள். வீட்டில் அனைவரும் ஒன்றாய் தூங்கியது போக என் அருகில் வர அருவருப்பாய் நினைத்து ஆளாளுக்கு தனித்தனியே படுத்துக் கொள்ளத் தொடங்கி என்னை தனி அறையில் விட்டார்கள். அண்ணன் டிகிரி வாங்கி ஒரு அரைகுறை வேலையை ஒத்துக்கொண்டு மதுரைக்கு ஓடிப்போனான். எல்லாம் வெறுத்திருந்த நேரத்தில் இன்னொரு அதிர்ச்சி நடந்தது. இலேசான நெஞ்சு வலி என்று இரவில் தண்ணீர் கேட்ட அம்மா விடியும் போது பிணமாக இருந்தாள். சாவிற்கு வந்த போதுகூட அண்ணன் என்னுடன் பேசவில்லை. இத்தனை வெறுத்தும் என் வீட்டின் மீது எனக்கு வெறுப்பு வரவில்லை. ஊருக்கு விஷயம் தெரிந்தது. பள்ளிக்கும் விஷயம் பரவ கிண்டலும் கேலியும் அளவில்லாமல் போனது. பையன்கள் மட்டுமல்ல பெண்களும் என்னுடன் பேச யோசித்தார்கள். நான் ஸ்கூலுக்குப் போக மறுத்தேன். அப்போது அண்ணனுக்கு வீட்டில் பெண் பார்க்க ஆரம்பித்தார்கள். இரண்டு மூன்று இடங்கள் தட்டிப் போனது. காரணம் நான்தான் என்ற போதுதான் வீட்டை விட்டுப் போகத் தீர்மானித்தேன். அண்ணன் நல்லா இருக்கட்டும். வீட்டில் கொஞ்சம் பணம் எடுத்துக் கொண்டு ரயிலேறி சென்னை வந்தேன்.

நாங்கள் ஐந்து பேர் சேர்ந்து எடுத்திருந்த குடிசைக்குள் நானும் சாந்தியும் வந்து சேர்ந்தோம். ராத்திரி ரயில் பிடித்து கோவை போவதாகத் திட்டம். நான் துணிகளை எடுத்து பேக்கில் வைத்துக் கொண்டிருந்தேன். சாந்தி சோகமாய் என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ஊருக்குப் போய் என்னை மறந்திட மாட்டாயே..." என்றாள்.

"பைத்தியம் மாதிரி பேசாதே.. நான் என்னையே வெளிப்படுத்திகிட்ட இடமே இதுதான்... எப்படி மறப்பேன்.? அடிக்கடி வந்து பார்த்துப் போவேன் ஓகே... என்றபோது என்னாலும் அழுகையை அடக்க முடியவில்லை.

ஒருநாள் கடற்கரையை பார்த்துக் கொண்டு நான் அமர்ந்திருந்த போது தற்கொலையைத் தவிர மனதில் வேறு எண்ணம் வரவில்லை.



"என்ன நல்லாயிருக்கியா?" என்று ஒரு குரல் வந்து என் பக்கத்தில் அமர்ந்த போதுதான், அவளும் என்னை மாதிரி ஒரு அரவாணி என்று புரிந்தது. என் வாழ்க்கையின் திசை மாற்றிய சந்திப்பு அது. அவள் பெயர் திவ்யா என்றாள். என்னை அவளுடன் கூட்டிப் போனாள். அங்கே என்னை மாதிரி நிறைய பேர் இருந்தார்கள். அவர்களின் தொழிலும் நடவடிக்கையும் வேறு மாதிரி இருக்க அங்கிருந்து தப்பிப்பதற்குள் என் பாதி உயிர் போயிருந்தது. அதற்குப் பிறகு ஓட்டம் ஓட்டம் தான்.

வேலை கிடைக்காத வேதனை வேறு. ஒரு நாளைக்கு ஒரு வேலை சாப்பாடு என்பதே பெரிய விஷயமாகிப் போனது. அவ்வப்போது வேறு வழியில்லாமல் போன பாலியல் தொழில் என் பசியைப் போக்கிக் கொண்டிருந்தது. ஒருமுறை எங்கள் ஊரைச் சேர்ந்தவரை பஸ் ஸ்டாண்டில் பார்த்தேன். வீட்டைப் பற்றி விசாரித்தேன். அண்ணனுக்கு கல்யாணம் ஆன விஷயத்தை அவர்தான் சொன்னார். அவரிடம் சித்ராவின் போன் நம்பரை கொடுத்தேன். அவர் அதை வாங்கிக் கொண்டு பயந்தபடி விலகி வேகமாய் நடந்தார்.

பகலெல்லாம் ரயிலில் பிச்சை எடுப்பது. இரவில் அதைக் கொண்டு நாங்களாகவே சமைத்து ஆட்டம் பாட்டம் என சந்தோசமாக சாப்பிடுவது என என் நாட்கள் போய்க் கொண்டிருந்தாலும் இந்த நிலமில்லாத அகதி வாழ்க்கை வெறுத்துப் போனது. எங்கள் வீட்டில் யாராவது வந்து கூப்பிட மாட்டார்களா என்று மனசு சதா வேண்டிக் கொண்டேதான் இருந்தது.

காலையில் ரயிலில் வந்து இறங்கிக் கொண்டேன். சேலைதான் கட்டியிருந்தேன். நான் சேர்த்திருந்த பணம் என் பேக்கில் இருந்தது. தங்கையின் கல்யாணத்திற்கு அதைத் தந்துவிடவேண்டும். அது ஒரு அக்காவாக என் கடமை. நான் எங்கள் வீட்டிற்குள் நுழைந்தேன். தங்கைதான் முதலில் தென்பட்டாள். நான் சந்தோசமாய் கூப்பிடுவதற்குள் மாறாத அந்தப் பழைய பயத்துடன் சட்டென உள் அறைக்குள் ஓடி மறைந்தாள். அதற்குப் பிறகு அண்ணன் வந்தான்.? "வாடா" என்று ஒரு வார்த்தைதான். அண்ணி அதுவும் பேசவில்லை. கையில் குழந்தை. அப்பா எங்கே? அவருக்கு உடம்பு எதுவும் முடியலையா? எனக்கு ஒன்றும் விளங்கவில்லை.

"வா... நித்யா.." என்று அப்பாவின் குரல் கேட்டபோதுதான் எனக்கு மூச்சு வந்தது. அப்பாவின் அறையில் எல்லோரும் கூடியிருந்தோம். என்னை நிமிர்ந்து ஒருவர் கூட பார்ப்பதாகத் தெரியவில்லை. என்ன நடக்கிறது இங்கே? பழைய பேப்பர் கத்தையை என் முன்னால் வைத்து அப்பா பேச ஆரம்பித்தார்.

"உன்னை இங்க வரச்சொன்னதுக்கு காரணம் இருக்கு நித்யா. உங்க அண்ணன் ஒரு பிஸினஸ் பண்ணிட்டு இருந்தான். அதில ஏகப்பட்ட நஷ்டம். அந்த கடனையெல்லாம் அடைக்கணும்ன்னா இந்த வீட்டை வித்தாகணும். இது தாத்தா சொத்து. அத விக்கணும்ன்னா உன் கையெழுத்து வேணும். அதுக்குத்தான் வரச்சொன்னேன். ஒரு கையெழுத்து போட்டுட்டு உனக்குச் சேர வேண்டிய பங்கை எடுத்துட்டு எங்காவது போய் நல்லாயிரு நித்யா..." எங்காவது போய் நல்லாயிரு..! அவ்வளவுதானா அப்பா? என் மனசு உடைந்து சிதற, எனக்கு முன்னால் இருந்த அந்த பத்திர பேப்பரை சட்டென கையில் எடுத்தேன்.

"கையெழுத்து போட்டு தர்றேன். எல்லாத்தையும் நீங்களே எடுத்துக்குங்க... எனக்கு சொத்தில ஒரு பைசாக் கூட வேண்டாம்ப்பா.." என்று நான் கதறி அழுதபடி என் பேக்கில் இருந்த பணத்தையும் அவர்கள் முன் எறிந்தபோது அவர்கள் எப்பொழுதும் போல் என்னை புரிந்துக் கொள்ளாமலே பார்த்தார்கள்.

முற்றும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் முரசு

## ஊர் கூடி

ஊர் கூடி தேர் இழுத்தால்
ஓடாத தேரும் ஓடாதோ
யார் என்ற வேற்றுமை
நம்முள் இருக்கும் வரை
போர் முடிந்தாலும்
புது உலகம் கண்டாலும்
சீர் செய்ய முடியுமா
சின்னத்தனம் நிறைந்து
வேண்டத் தகாத
வீண் விதண்டாவாதம்
நல்லவர் போல் இருந்து
நயவஞ்சகம் நிறைந்த நெஞ்சர்
இல்லாததும் பொல்லாததும்
மூட்டைப் பூச்சி போல்
முடிந்து விட்ட சொற்களால்
ஏழை பணக்காரன்
இருப்பவன் இல்லாதவன்
உயர்ந்தவன் தாழ்ந்தவன்
படித்தவன் படிக்காதவன்
புத்தம் புதிய சித்திரை தாயே
ஜய வருட சீர்மிகுந்தவளே
சிறப்பெல்லாம் தருபவளே
எல்லார் மனதும் குடிகொண்டு
எழுச்சியை காட்டிடம்மா
சாந்தி சமாதானம்
தண்ணொளி பெருகிட
ஜயவருட பௌர்ணமி
நன்னாளில் மக்கள்
உள்ளம் பெருமை கொள்ள
ஊர் கூடி தேர் இழுத்தால்
ஓடாத தேரும் ஓடாதோ?

கலாபூஷணம் அன்பூரான் அன்புவழிபுரம்
திருகோணமலை

## காந்தி ஐயா!

மனத்தின்கண் மாசில்லாத
மாந்தனிங் கெவனுமில்லை!
கனம் மிகு கந்தையாவாய்
காந்தி ஐயா தான் உள்ளார்
என நினைக்கின்றேன், இஃதை
எல்லோரும் சரி என்பார்கள்!
இனமுண்டாம், மதமுண்டாம்,
என்றாலும் மனமாஅண்டாம்!

வள்ளுவன் நாளிற் கூட
வந்திலன் மாசிலாதான்!
உள்ளியே கயவருக்கும்
ஓர் அதிகாரம் தந்தார்!
கொள்ளுநற் குறட்பா மேடை
கூறலாம் - வாழலாமா?
தெள்ளிய குறளை மட்டும்
தெரிந்து பின்பற்றுவோமா?

தாமரைத்தீவான்
(ஈச்சந்தீவு - கிண்ணியா)

## விடியலைத் தேட வாழ்வு வெற்றியாகும்

மழலையிலாத வீட்டில்
மகிழ்ச்சி இல்லை
மனைவி இல்லாத மனையில்
மங்களம் இல்லை!
சன்மார்க்கம் இல்லாத இல்லில்
சந்தோசமில்லை
சமய நெறி தவறின்
சஞ்சலம் குடிகொள்ளுமுண்மை!

உழைப்பாளர் இல்லா வீட்டில்
ஊதியம் கிடைப்பதில்லை
மழை பெய்யாத ஊரில்
வரட்சியே
அன்றி
வளமேயில்லை!

குடிகாரன் வீட்டில் என்றும்
குழப்பத்தால் வளரும் தொல்லை
விடியலைத் தேட முடிவு
வெற்றிப் பாதைக்கு வழிவகுக்கும்!

சேனையூரான் - மூதூர் கிழக்கு

## மக்கள் மனதில் வாழ்ந்திருப்பவர்கள்

அன்பாலுயர்ந்தவர்
அன்னை திரேசா
அறிவாலுயர்ந்தவர்
அறிஞர் அண்ணாதுரை

பண்பாலுயர்ந்தவர்
அண்ணல் காந்தி
பரி பக்குவமடைந்தவர்
மகான் புத்தர்

நடிப்பாலுயர்ந்தவர்
நடிகர் திலகம் சிவாஜி கணேசன்
நடிகரும் நாடாள முடியும் என
உழைப்பாலுயர்ந்தவர் எம்.ஜி.ஆர்

தியாக சீலராய் திகழ்ந்தவர்
நெல்சன் மண்டேலா
தேயாத நிலவாக திகழ்ந்த இவர்கள்
எம் சிந்தையில் என்றும்
நிறைந்திருப்பவர்கள்!



# கோணேசர் கல்வெட்டு

**பாகம் : 03**


குளக்கோட்ட மன்னன் நீதி பரிபாலனத்தை இலகுவாக மேற்கொள்வதற்காகவும் கோணேசர் ஆலயம் இந்து மக்களின் சொத்து என்பதை நிரூபிப்பதற்காகவும் பல்வேறு பணிகளை வரையறுத்துள்ளார். "கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலையமர்ந்த" பெருமானுக்கு பணிகள் செய்யும் பொறுப்பு ஒவ்வொரு ஊர்களுக்கும் வழங்கப்பட்டிருந்தன என்பதை கோணேசர் கல்வெட்டு ஆதாரப்படுத்துகின்றது.

கட்டுக்குளப் பற்று என்று வகுக்கப்பட்ட பிரிவில் உள்ளவர்கள் கோணேசர் பெருமானுடைய பணிகள் செய்வதற்கு பின்வருமாறு பணிக்கப்பட்டிருந்தார்கள். அவர்களில் நிலாவெளியூரில் வாழ்ந்த மேன்மைக் குரியவர்களிற் பெரியவர்கள் இறைவனுடைய சன்நிதியில் முன்னின்று காப்பணிந்து திருவிழாக்களை நடத்துதல், ஆறு அவணம் சுத்தமான நெல்லை ஆலயத்தில் ஒப்படைத்தல், பால், தயிர், நெய் கொடுத்தல், சுங்கத் தீர்வை, கடற் பிரயோசனத்தில் இலாபங்கள் என்பனவற்றை கோணை ஈசனுக்கு வழங்க வேண்டுமென்று குளக்கோட்ட மன்னன் கட்டளை பிறப்பித்திருந்தான்.

கொட்டியாரப் பற்றில் வாழ்பவர்கள் கோணேசர் கோயிலுக்கு பாக்கும், வெற்றிலையும், வாழைப்பழமும், சந்தனமும், பால், தயிர், நெய்யும், நூறு அவணம் அரிசியும் கொடுத்து வர வேண்டும். அத்தோடு ஆமணக்கு, இலுப்பு புன்னை பருப்புக்கள் மூலம் பெறப்பட்டஎண்ணெய் வகைகளையும் கொடுக்க வேண்டும்.

சோழர் காலக் கோயில்கள் அவ்வூர் மக்களின் அரசியல், சமூகம், பொருளாதாரம் ஆகிய பல துறைகளைச் சார்ந்த பல்வேறு இயக்கங்களிலும் பங்கு கொண்ட சமூக நிறுவனங்களாக திகழ்ந்தன. அத்தகையதொரு நிலையை ஈழத்தில் கோணேசர் ஆலயம் அடைந்திருந்தது. களஞ்சிய சாலையாகவும் திகழ்ந்திருந்தது. கோணேசர் கோவில் வாசலுக்கு தென்கிழக்குப் பக்கமாக எண்ணெய் வகைகளையும், நெய்யையும் சேமித்து வைப்பதற்கு ஏழு கிணறுகளைக் கட்டி அவைகளுக்குக் குற்றமற்ற துலாக்கள் போட்டு வாளியுமிட்டு கிணறுகளைப் பாதுகாக்கச் சுற்று மதில்களும் கட்டி கதவுகளுமிட்டான். எண்ணெய், நெய்யை ஏற்கவும் கொடுக்கவும் எண்ணெயதிகாரம் எனப் பொறுப்பதிகாரிகளையும் நியமித்திருந்தான்.

குளக்கோட்டன் காஞ்சிபுரத்துக் கோயிலொன்றைச் சேர்ந்த ஓதுவார் குடிகளில் ஒன்றினை இலங்கைக்கு வரவழைத்திருந்தான். அக்குடியிலுள்ள ஒருவனை திருக்கோணேஸ்வரத்தில் திருப்பதிகம் பாடுவதற்கு நியமித்திருந்தான். அவனுக்கு திருவாசகப் புலவன் என்ற பெயருமிட்டு மாணியமாக பள்ளவெளியில் இரண்டவண நிலமும் சம்பூரும் வழங்கிச் செப்பேடு கொடுத்தமை புலவன் வரவு என்ற தலைப்பின் கீழுள்ள கல்வெட்டின் சாரமாகும்.



தமிழகத்து கோயில்களிலே திருப்பதிகங்களை ஓதுவதற்கு ஓதுவார்களை நியமிப்பது வழமை. அத்தகையோருக்கு வழங்கப்பட்ட நிலங்களைத் திருப்பதியக் காணி என்றும், திருவாசகக் காணி என்றும் சாசனங்கள் குறிப்பிடுகின்றன. ஓதுவாருக்கு கிடைத்த நிலமாணியம் தமிழகத்திலிருந்த திருப்பதியக் காணி, திருவாசகக் காணி என்பனவற்றை ஒத்ததாகும். ஈழத்தில் பாடல் பெற்ற தலம் என்பதனால் அதனூடாக தேவார திருவாசகங்களை ஓதுகின்ற சைவப் பாரம்பரியம் அக்காலத்திலேயே வளர்த்தெடுக்கப்பட்டிருக்கின்றது.

குளக்கோட்டன் கோணேஸ்வரத்தில் பூசை வழிபாடுகளைச் செய்வதற்குப் பாசுபதர்களை குருமார்களாக நியமித்திருந்தான். வன்னிமைகளிடம் "மகத்தான பாசுபத மறையோர் தங்கள் சித்தமது நேராக நீதி சொல்வாய்" என்று கூறியிருந்தான். பாசுபதர்கள் கயவாகு மன்னன் காலம் வரை கடமையாற்றி வந்தனரென்றும், கோணேசர் கல்வெட்டும் திரிகோணாசல புராணமும் கூறுகின்றன.

"பழுதில் திகழ் கயவாகு வருவனன் நாட் பாசுபதர் இறப்பர் பழமறையோர் சேர்வர் " என்று கோணேசர் கல்வெட்டில் காணப்படுகின்றது. கயவாகு மன்னன் வரவு கேள்வியுற்று, அவர்கள் கடலிற் பாய்ந்து மரணம் அடைந்தனர். இதன் பின்னர் சைவநாயக முதன்மை, வேத நாயக முதன்மை எனும் இருபாக முதன்மை அச்சகர்களாக நியமிக்கப்பட்டனர். இந்தச் செய்தியையும் இந்நூலில் காண்கின்றோம்.

கடல் கடந்த நாடுகளை எல்லாம் கட்டியாண்ட சோழப்பேரரசனின் பரம்பரையில் தோன்றிய குளக்கோட்டன் பேரரசனாகவும் தனக்குக் கீழ் சிற்றரசுகளை வைத்து ஆட்சியை மேற்கொண்டிருந்தான் என்பது கோணேசர் கல்வெட்டின் மூலம் தெரியவருகிறது. திருகோணமலையில் ஆட்சியை நடத்திய வன்னபம் என்ற குறு நில மன்னனின் ஆட்சியை ஏற்படுத்தியிருந்தான்.

மதுரையைச் சேர்ந்த சந்திர வம்சத்திலே தோன்றிய இராமனை ஒத்த சீலம் நிறைந்தவனாகிய தனியுண்ணாப் பூபாலன் என்பவரை அழைத்து வந்து திருகோணமலை நகரத்தை அரசாட்சி செய்யும்படி நியமனம் செய்தான். திருகோணமலையில் ஆட்சி புரிவதும் நீதி பரிபாலனம் செய்வதும் வன்னிபத்தின் பிரதான கடமைகளாகும். அத்துடன் கோணேசர் கோயிலில் ஆராதனைகளையும், ஆலய சேவைகளையும் தடையின்றியும் சிறப்பாகவும் செய்விப்பது திருகோணமலை வன்னிபத்திற்கு சிறப்பான கடமைகளாகும். அத்துடன் கோணேசர் கோவில் ஆராதனைகளையும் ஆலய சேவைகளையும் தடையின்றியும் சிறப்பாகவும் செய்விப்பது திருகோணமலை வன்னிபத்திற்கு சிறப்பாக உள்ள பொறுப்புக்களாகும்.

கோயிற் காரியங்கள் தொடர்பாக தானும் வரிப்பத்தார் முதன்மை நாட்டவர் முதலியோரை அழைத்து அவர்கள் முன்னிலையிலே சில சமயங்கள் விசாரணைகள் நடத்தியமை பற்றி கோணேசர் கல்வெட்டின் உரைநடை பகுதியில் குறிப்புக்கள் உள்ளன.

திருகோணமலையில் நீதி பரிபாலனை செய்யும் உரிமை வன்னிபத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.. குளக்கோட்டன் மனுநீதி கண்ட சோழனின் மரபில் வந்தவன். நீதி முறைகளை நன்கு அறிந்தவன். நீதி வழங்குபவன். இதனால் வன்னிமைகள் எவ்வாறு நீதி வழங்க வேண்டுமென்று கோணேசர் கல்வெட்டில் குறிப்பிட்டிருக்கின்றான்.



தொடரும் ..

எஸ்.பிரகாஷ் (MA)
ஆசிரியர்,
தி/ நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரி,
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஹரியின் பூஜையில் அபிநயா

சசிகுமாரின் நாடோடிகள் படத்தின் மூலம் அறிமுகமான மாற்றுத்திறனாளி நடிகை அபிநயா, அதன்பின்னர் சசிகுமாரின் ஈசன் திரைப்படத்திலும் முக்கிய வேடத்தில் நடித்துள்ளார். தமிழ், தெலுங்கு மற்றும் மலையாளம் என இதுவரை 18 படங்களில் நடித்துள்ள அபிநயா, விஷாலின் "பூஜை" படத்தில் விஷாலின் தங்கையாகவும், ஸ்ருதிஹாசனுக்கு தோழியாகவும் நடிக்க தற்போது ஒப்பந்தம் ஆகியுள்ளார்.

ஹரி இயக்கும் முதல் படத்தில் நடிக்கும் அபிநயா, இந்த படத்தில் வாயாடி பெண்ணாக நடிக்கவுள்ளாராம். வாய் பேச முடியாத ஒரு நடிகை வாயாடியாக நடிப்பதை திரையில் பார்க்க மிகவும் வித்தியாசமாக இருக்கும் என படக்குழுவினர் தெரிவித்தனர்.

தற்போது அபிநயா, பூஜை, மேளதாளம் ஆகிய இரண்டு படங்களில் நடித்து வருகிறார்.

# சினிமுரசு

## சினிமா குறுஞ்செய்திகள்

- **அதிகாரபூர்வ அறிவிப்பு - உத்தம வில்லன்**

கமல்ஹாசன் நடிக்கும் உத்தம வில்லன் படமானது செப்டம்பர் 10 இல் வெளியிடப்படும் என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.



- **தீபாவளி கொண்டாடும் அஜித்**



'ஊரே கிறிஸ்துமஸ் கொண்டாடும், ஆனா எனக்கு மட்டும் தீபாவளிடா' என பஞ்ச் டயலொக் அடிக்கிறார் கௌதம் மேனன் இயக்கும் படத்தில் நடிக்கும் அஜித். அஜித் - அனுஷ்கா இப்படத்தில் ஜோடி சேருகின்றனர். எனினும் இன்னும் இப்படத்திற்கு தலைப்பு இடவில்லை.

- **பாலிவூட்டில் பட்டைய கிளப்பப் போகும் சமந்தா**

தமிழ் திரையுலகில் தனக்கென ஒரு பலமான பெயரை நிலை நாட்டிய சமந்தா பாலிவூட்டில் நடிக்கவுள்ளார். இதைக் கேள்வியுற்ற ஏனைய நடிகைகள் செய்வதறியாது திணைத்துள்ளனர்.

- **குஷ்புவின் வற்புறுத்தலால் நடிக்க ஒத்துக்கொண்ட ஹன்சிகா**

சுந்தர் சீ இயக்கும் அரண்மனை திரைப்படத்திற்கு நாயகியாக நடிக்கமாறு ஹன்சிகாவிடம் குஷ்பு வற்புறுத்திக் கேட்டுள்ளார்.

- **நான் உயிரோடு இருக்கும் போதே அனிமேஸனா!**

உயிரோடு இல்லாதவர்களையே அனிமேஷன் செய்து படத்தில் நடிக்கவைப்பார்கள். ஆனால் நான் உயிரோடு இருக்கும் போதே என்னை வைத்து அனிஷேன் படம் எடுத்துள்ளனர் சிறிது உருக்கத்துடன்.

- **மீண்டும் அம்மன்**

18 வருடங்களுக்கு முன்பு வெளிவந்த அம்மன் தொடர்ச்சியாக 'மீண்டும் அம்மன்'.


## குத்து வாங்கிய ப்ரியங்கா



பாலிவுட் ஏஞ்சல் ப்ரியங்கா சோப்ரா தற்போது குத்துச்சண்டை வீராங்கனையாக ஒரு படத்தில் நடித்து வருகிறார். இந்திய குத்துச்சண்டை வீராங்கனை மேரி கோம் வாழ்க்கை வரலாற்றை தழுவி எடுக்கப்பட்டு வரும் இந்த படத்தில் வடகிழக்கு மாநில குத்துச்சண்டை வீராங்கனை ஒருவரும் நடிக்கிறார். இருவரும் குத்துச்சண்டை போடும் காட்சியின் படப்பிடிப்பு சமீபத்தில் தர்மசாலாவில் நடந்தது. இதில் ப்ரியங்காவை எதிர்க்கும் வீராங்கனை தவறுதலாக விட்ட ஒரு குத்து, அவருடைய கன்னத்தை பதம் பார்த்தது. கண்களுக்கு கீழே காயம் ஏற்பட்டதால், ப்ரியங்கா சோப்ரா நிலைகுலைந்து கீழே விழுந்தார்.

இந்த சம்பவத்தால் இயக்குனர் Omung Kumar அதிர்ச்சி அடைந்தார். உடனடியாக படப்பிடிப்பை நிறுத்திவிட்டு, ப்ரியங்காவுக்கு முதலுதவி அளிக்க ஏற்பாடு செய்தார். ஒருமணி நேரம் ஓய்வுக்கு பின்னர் ப்ரியங்கா சோப்ரா மீண்டும் படப்பிடிப்பில் கலந்துகொண்டார். அவருக்கு ஏற்பட்ட உண்மையான காயத்தை படத்தில் பார்க்கலாம் என படக்குழுவினர் கூறினர்.

## காதலுடன் சுற்றும் எமி



ஷங்கரின் ஐ படத்தில் நடித்து வரும் எமி ஜாக்சன் லண்டனைச் சேர்ந்த ஆங்கிலேயே பெண். மதராசபட்டினம் படத்தில் ஆங்கிலேய பெண்ணாக நடிக்க வந்தவரை ஷங்கர், ஐ படத்தில், சென்னை பெண்ணாக மாற்றி நடிக்க வைத்துக் கொண்டிருக்கிறார்.

எமி நடிக்க வருவதற்கு முன்பே லண்டன் தொலைக்காட்சியில் காரனேஷன் ஸ்ட்ரீட் என்ற நிகழ்ச்சியை நடத்தி வரும் தொகுப்பாளர் ரியான் தாமஸ் என்பவரை காதலித்து வந்தார். சினிமாவில் நடிப்பதில் பிசியாகிவிட்டதால் சில காலம் அவரை சந்திக்காமல் இருந்தார்.

இப்போது ஐ படம் முடிந்துவிட்டதால் லண்டன் பறந்த அவர் சில நாட்களாக காதலனுடன் லண்டன் வீதிகளில் சுற்றித் திரிந்துள்ளார். லண்டனில் பாப்புலரான எமியின் காதலர் ரேயான் தாமஸ் க்கு எமி, தவிரஇன்னும் சில காதலிகள் இருக்கிறார்கள் என்பது கூடுதல் தகவல்.

## ஆடியோ வெளியீட்டுக்கு வர மறுப்பு



நீண்ட நாட்களாக தயாரிக்கப்பட்டு வரும் சிம்புவின் 'வாலு' ஒருவழியாக திரைக்கு வருகிறது. பிப்ரவரி இறுதியில் ரிலீஸ் ஆகவுள்ள இந்த படத்தின் ஆடியோ வெளியீட்டு விழாவை காதலர் தினத்தில் வைத்துக்கொள்ள சிம்பு முடிவு செய்திருப்பதாக கூறப்படுகிறது.

சிம்புவும், ஹன்சிகாவும் நெருக்கமானது இந்த படத்தின் படப்பிடிப்பின் போதுதான். அதன்பிறகு சில காரணங்களால் தற்போது இருவருக்கும் இடையே பிரிவு ஏற்பட்டுள்ளதால் ஹன்சிகா ஆடியோ விழாவுக்கு வருவாரா என்ற கேள்விக்கு ஹன்சிகா தனது டுவிட்டரில் தெளிவு படுத்தியுள்ளார். வாலு படத்தின் ஆடியோ விழாவினை திடீரென வைத்துள்ளதால் என்னால் கலந்துகொள்ள முடியாத நிலையில் இருப்பதாகவும், அன்றைய தினத்தில் தெலுங்கு பட ஷூட்டிங் ஒன்றிற்காக தாம் ஐதராபாத்தில் இருக்கவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

ஆனால் சிம்புவின் இந்த விழாவில் கலந்துகொள்வதை தவிர்க்கவே ஹன்சிகா இவ்வாறு கூறுவதாக கோலிவுட்டில் பேசப்பட்டு வருகிறது. ஹன்சிகாவின் இந்த டுவிட்டர் பதில் சிம்புவை டென்ஷனாக்கியதாக கூறப்படுகிறது.

## 22 மணி நேர - படப்பிடிப்பு

கும்கி படத்தின் மூலம் அறிமுகமான நடிகர் பிரபுவின் மகன் விக்ரம் பிரபு நடிக்கும் திரைப்படம் 'சிகரம் தொடு'. இந்த திரைப்படத்தை தூங்கா நகரம் இயக்குனர் கவுரவ் இயக்கி வருகிறார். விக்ரம் பிரபுவின் "இவன் வேற மாதிரி" திரைப்படத்தையும் யூடிவிதான் தயாரித்தது.



தூங்கா நகரம் இயக்குனர் கவுரவ் சமீபத்தில் தனது .:.பேஸ்புக்கில், 'சிகரம் தொடு' படத்தின் படப்பிடிப்பு தொடர்ந்து 22 மணி நேரம் நடந்து சாதனை படைத்துள்ளதாகவும், இந்த தொடர் படப்பிடிப்புக்கு முழு ஒத்துழைப்பு கொடுத்த விக்ரம் பிரபு உள்பட படக்குழுவினர் அனைவருக்கும் தான் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். 22 மணிநேர படப்பிடிப்பில் யாரும் சிறிதுநேரம் கூட ஓய்வே எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## புயலில் சிக்கிய குழு




பாலிவுட் ஹீரோயின் அனுஷ்கா சர்மா, என்.எச் 10 என்ற படத்தை தயாரித்து நவ்தீப் சிங்கிற்கு ஜோடியாக நடித்து வருகிறார். இதன் படப்பிடிப்பு சில நாட்களாக ஜோத்பூரில் உள்ள பாலைவனத்தில் நடந்து வருகிறது. கடந்த சில தினங்களுக்கு முன்பு வீசிய கடும் பாலைவன புயலால் பலபேர் இறந்தனர். இந்த புயலில் அனுஷ்கா சர்மாவின் பட யூனிட்டும் மாட்டிக் கொண்டது.

மணல் புயல் வீச ஆரம்பித்ததுமே அனுஷ்காவையும், நவ்தீப் சிங்கையும் பாதுகாப்பாக அனுப்பி வைத்து விட்டு கேமரா உள்ளிட்ட முக்கிய பொருட்களை மட்டும் எடுத்துக் கொண்டு சென்று விட்டனர். மணல் புயலால் பாடல் காட்சிக்காக போடப்பட்டிருந்த செட்டுகள் அனைத்தும் வீணானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்கள் ஏமாற்றும்போது சொல்பவை எவை?



**அவள் எனது தோழி**

உங்கள் கணவன் புதிதாக ஒரு பெண்ணுடன் தொடர்பில் இருப்பதை நீங்கள் அறிகிறீர்கள்.

நீங்களாக கண்டுபிடிப்பதற்கு முன்பாக அவர் உங்களிடம் அதனை பற்றி எதையும் தெரிவிக்காமல், நீங்கள் கண்டு பிடித்து, அந்த பெண்ணை சந்திக்கலாமா என்று கேட்டால் அவள் எனது தோழி மட்டுமே என்று பொய்யாக சமாளிப்பார்.

**ப்ளீஸ் என் மொபைலைத் தொடாதே**

உங்கள் கணவனின் கைப்பேசியில் அவர் காதலி அனுப்பிய எஸ்.எம்.எஸ்-களை படிக்க கூடாது என்ற காரணத்தினால் தான் உங்களை அவர் கைப்பேசியை தொடவிடமாட்டார்.

**நீ என்னை ஏமாற்றுகிறாய்?**

ஏமாற்றும் ஆண்கள், தங்களின் மனைவியின் மீது அந்த பழியை சுமத்துவார்கள். ஏன்? "நாம் ஏமாற்றும் போது, ஏன் அவள் நம்மை ஏமாற்றக் கூடாது என்ற எண்ணமே அதற்கு காரணம்.

**நீ சரியில்லை**

வேறொரு பெண்ணின் தொடர்பில் இருக்கும் ஆண்களின் பார்வைக்கு மனைவி எது செய்தாலும் குற்றமாக இருக்கும்.

மனைவி எது செய்தாலும் குறை கண்டுபிடித்து நீ சரியில்லை என்று முகத்திற்கு எதிரே சொல்லிவிடுவார். காரணம் அவர் விரும்பியவை வேறொரு பெண்ணிடம் இருந்து அவருக்கு கிடைக்கின்றன.

**எனக்கு அலுவலகத்தில் வேலை உள்ளது**

திடீரென அவருக்கு அலுவலகத்தில் அதிக வேலை வந்து விடும். எப்போதும் போல வீட்டுக்கு சரியான நேரத்தில் வர மாட்டார்.

காரணம், உண்மையிலேயே வேலைப்பளு அல்ல. மாறாக தன் காதலியை சந்திக்க சென்று விடுவார். இப்படி செய்வதால் உங்களிடம் இருந்து தப்பித்து கொள்ளலாம் அல்லவா?

# விளையாட்டுப் பையன்

## சாதனைப் பயணத்தில் வட்ஸ்அப்

மொபைல் சாதனங்களின் மூலம் தொடர்புகளை ஏற்படுத்த உதவும் WhatsApp அப்பிளிக்கேஷனை சில மாதங்களுக்கு முன்னர் பேஸ்புக் நிறுவனம் கொள்வனவு செய்திருந்தது.


இதன்பின்னர் இந்த அப்பிளிக்கேஷன் பாவனையாளர்களின் எண்ணிக்கை சடுதியாக உயரத்தொடங்கியுள்ளது.

தற்போது 500 மில்லியனிற்கும் அதிகமான பயனர்களைக் கொண்டு சாதனைப்பயணத்தை தொடர்கிறது WhatsApp அப்பிளிக்கேஷன்.

கடந்த வருடம் டிசம்பர் மாதத்தில் 100 மில்லியனாக காணப்பட்ட பயனர் எண்ணிக்கை நான்கே மாதங்களில் 500 மில்லியனை எட்டியுள்ளது.

இதேவேளை நாள்தோறும் 700 மில்லியனிற்கும் அதிகமான புகைப்படங்கள் பகிரப்படுவதுடன், 100 மில்லியன் வரையான வீடியோக்களும் பகிரப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


## Xperia M2 Dual



Sony நிறுவனம் தனது புதிய ஸ்மார்ட் கைப்பேசியான Xperia M2 Dual இனை இம்மாதம் 25ம் திகதி இந்தியாவில் அறிமுகம் செய்து வைக்கவுள்ளது.

இந்திய பெறுமதியில் 21,990 ரூபாவாக காணப்படும் இக்கைப்பேசியானது 4.8 அங்குல அளவுடைய தொடுதிரை, 1.2GHz வேகம் கொண்ட Quad-Core Snapdragon 400 SoC Processor, பிரதான நினைவகமாக 1GB RAM மற்றும் 8GB சேமிப்பு நினைவகத்தினைக் கொண்டுள்ளது.

மேலும் Android 4.3 Jelly Bean இயங்குதளத்தினைக் கொண்டுள்ளதுடன், 8 மெகாபிக்சல்களைக் கொண்ட கமெரா, இரட்டை சிம் வசதி என்பவற்றினையும் உள்ளடக்கியுள்ளது.




விண்டோஸ் எக்ஸ்பியின் ஆயுட் காலம் கடந்த 8ம் திகதியுடன் முடிந்தது. விண்டோஸ் எக்ஸ்பியை உபயோகப்படுத்தும் பயனாளிகள் விண்டோஸ்7 க்கு மாறும் நேரம் வந்துவிட்டது. விண்டோஸ் எக்ஸ்பிக்கான மேம்படுத்தல் பணியை மைக்ரோசாப்ட் நிறுவனம் நிறுத்தியது. எனவே இனி மேம்படுத்தல்கள் இருக்காது என்று அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

## கூகிள் கண்ணாடி



இணைய ஜாம்பவானான கூகுள் நிறுவனத்தின் பிரம்மிக்க வைக்கும் திட்டங்களுள் ஒன்றான கூகுள் கிளாஸில் தற்போது புதிய வசதி ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அதாவது அப்பிளின் iPhone மூலம் பெறப்படும் குறுஞ்செய்திகளை கூகுள் கிளாஸிலும் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருத்தலே அந்த வசதியாகும்.iPhone இனை ஒருமுறை கூகுள் கிளாசுடன் ஒத்திசைவாக்கம் செய்ய பின்னர் இவ்வசதியினை தொடர்ச்சியாக பெற்றுக்கொள்ள முடியும்.

# ஒரு கொலையின் கதை

2-8

**ஒரு உண்மைச் சம்பவத்தைத் தழுவிய கதை...... கதையொன்றில் புனைவுகள் இருப்பதைப் போல இக் கதையிலும் புனைவுகள் உள்ளன.**

அவர் அலுமாரியை விட்டு தொலைபேசியைப் பிடிக்க... மற்றையவர் அலுமாரியைத் தள்ள நிலைதடுமாறிய அலுமாரி அதிர்ந்த போது அவ்வலுமாரியின் மேற்புறமாக செதுக்கப்பட்டிருந்த யானை ........

---

மெதுவாக அதிர்ந்து வித்தியாசமான ஒலியொன்றை எழுப்பியது... அவ்வொலியைச் சரியாகக் கிரகித்துக்கொண்டனர் இரண்டு புலனாய்வாளர்களும்....

அந்தக் கிரகிப்பு அவர்களுக்கு முக்கியமான தடயமொன்றை வெளிக்கொடுத்தது.... தடயங்கள் சிலவேளைகளில் அதிஸ்டவசமாகக் கிடைப்பது இயற்கையானதே... அதனைச் சிலர் கடவுளின் கிருபை எனவும் அழைப்பதுண்டு. அண்மையில் கூட முழுமையான தலைக்கவசம் அணிந்து வந்து கொள்ளையொன்றில் ஈடுபட்ட நபரொருவர் யாரென்பதைக் கண்டு பிடிக்க முடியாமலே போய்விட்டது. ஆனால் தானியங்கிப் புகைப்படக் கருவியின் பதிவுகளைப் பரிசீலித்த போது அவர் அணிந்து வந்திருந்த தலைக்கவசத்தில் விசேட அடையாளமொன்றிருந்ததைப் புலனாய்வாளர்கள் கண்டு கொண்டனர்.

அந்த விசேட அடையாளம் குறித்த ஒரு கடையிலிருந்து விற்கப்படும் தலைக்கவசங்களுக்கே உரித்தானது என்பதைக் கண்டுகொண்ட காவல்துறையினர் அக் கடைக்குச் சென்று அக்கடையின் தானியங்கிப் புகைப்படக் கருவிப் பதிவுகளை ஆராய்ந்தபோது குறித்தவகை தலைக்கவசத்தை வாங்க வந்த இளைஞரின் முகம் தெளிவாக பதிவாகியிருந்தது.

இதனை தற்செயலானது என்பதா? அல்லது கடவுளின் கிருபை என்பதா?

அன்று அலிக வின் வீட்டில் அந்த அலுமாரியை நகர்த்தவேண்டிய தேவை அப் புலனாய்வாளர்களுக்கு ஆரம்பத்தில் இருக்கவேயில்லை. ஆனால் அவ்வலுமாரியின் பின்பகுதியில் ஒரு வெண்சுருட்டின்



அடிப்பாகம் புலனாய்வாளரின் கவனத்தை ஈர்த்ததால் அதனை எடுத்துக் கொள்வதற்காக அவர்கள் அலுமாரியைப் அரக்க முற்பட்டார்கள். அலிக வெண்சுருட்டைப் புகைப்பவன் என்பது அவர்களுக்குத் தெரியும். அதனைக் கருத்தில் கொண்டு அவ்வடிப்பாகம் அலிகவின் உடையது தான் என புலனாய்வாளர் தீர்மானித்து இருந்தால் அவ்வடிப்பாகத்திற்கு அவர் அவ்வளவு முக்கியத்துவம் கொடுத்திருக்க மாட்டார். ஆனால் அவர் அந்த அடிப்பாகத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

அதேவேளை காப்பிட்டுத் தாளிட முதல் நாளாந்தம் சுத்தம் செய்யப்பட்டு வந்த அந்த அறையில் இருந்து அந்த வெண்சுருட்டின் அடிப்பாகம் பெரும்பாலும் இல்லாமல் போயிருக்கவே வாய்ப்புக்கள் இருந்தது. ஆனால் அவ்வாறு அவ்வடிப்பாகம் இல்லாமல் போகவில்லை. அது அங்குதான் இருந்தது.

அதனைக் கைப்பற்ற அலுமாரியினை அரக்கிய போது புலனாய்வாளரின் கைத்தொலைபேசி தவறியிருக்காவிடில் அலுமாரி அதிர்ந்திருக்காது. ஆனால் கைத்தொலைபேசி கைதவறியது...அலுமாரி அதிர்ந்தது. யானை ஒலி எழுப்பியது...

உடனடியாகவே அலுமாரியை அரக்குவதை விடுத்து ஒலு எழுப்பிய யானையை இருவரும் அவதானித்தனர்.

ஆரம்பத்தில் அந்த யானை அவ்வலுமாரியுடன் இணைந்ததாகவே செதுக்கப்பட்டிருந்ததான தத்துரூப அமைப்பில் இருந்தது. அத்துடன் அந்த யானையை தனியாக அரக்க முடியாதும் இருந்தது. அதனால் அந்த யானை மீது எவ்வித சந்தேகத்தையும் புலனாய்வாளர்கள் கொண்டிருக்கவில்லை. ஆனால் தற்போதோ அந்த யானை மெதுவாக விலகி தனக்கும் அலுமாரிக்கும் இடையே ஒரு தந்திரோபாய மறைவிடத்தை வைத்திருப்பதை வெளிக்காட்டியது.

மெதுவான இடைவெளி தெரிவதை கண்டுகொண்டு புலனாய்வாளர்கள் யானையை முழுவதுமாக அரக்கியபோது அந்த மறைவிடம் முழுவதுமாகத் தெரிந்தது.

அந்த மறைவிடத்தில் கடையொன்றின் பெயருடன் கூடிய பொலித்தீன் பையினால் சுற்றப்பட்ட பொருள் ஒன்று இருந்தது.

அதனைக் கையிலெடுக்கும் வரை அதனை நகைகளாகவோ அல்லது எதேனும் பெறுமதியுள்ள பொருளாகவோ இருக்கும் எனப் புலனாய்வாளர்கள் நம்பினர்.

ஆனால் அது நீட்டுவாக்கிலுள்ள கனதியான பொருளாக இருந்தது.

கையுறையினை மேலும் இறுக்கிக்கொண்டு புலனாய்வாளர் ஒருவர் மிகக் கவனமாக அப் பொருளை வெளியில் எடுத்தார்.

ஆறுதலாக இரண்டு கைகளையும் பாவித்து மெதுவாக அந்தப் பொலித்தீன் பையின் சுருக்கை விடுவித்து உள்ளிருந்த பொருளை வெளியில் எடுத்த போது தான் தெரிந்தது அது இரத்தக் கறையுடன் கூடிய கத்தியொன்று என......

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாங்கங்களின் சமர்

சி.சசிகுமார்

திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்திற்கு இடையிலான வருடாந்த மாபெரும் துடுப்பாட்ட போட்டி இம்முறை திருகோணமலை மண்ணில் எதிர்வரும் 12ம் திகதி நடைபெற உள்ளது.

Battle of the Golds 1993 ம் வருடம் ஆரம்பித்து

## BATTLE OF THE GOLDS

வைக்கப்பட்டது.
இராம கிருஷ்ண மிசன் பாடசாலைகளான திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயம் என்பனவற்றுக்கு இடையே இது நடத்தப்படுகின்றது. முதல் போட்டி மென்பந்தில் திருகோணமலையில் 20 பந்து பரிமாற்றங்கள் கொண்டதாக ஆரம்பித்து வைக்கப்பட்டு இரண்டாவது வருடம் கடினபந்தாக மாற்றப்பட்டது.

மூன்றாவது வருடம் 1995 இன்னிங்ஸ் 2 தினங்கள் போட்டியாக நடத்தப்பட்டது. தொடர்ந்து நிர்ணயிக்கப்பட்ட பந்து பரிமாற்றம் கொண்டதாக வருடா வருடம் இப்போட்டி மாறி மாறி அந்தந்த பாடசாலைகளால் நடத்தப்பட்டு வருகின்றது. 2006ம் வருடம் 14வது போட்டி கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட அசாதாரண நிலையினால்நடத்தப்படவில்லை.

இதுவரை நடைபெற்ற போட்டிகளில் 12 தடவை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியும் 8 தடவை மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயமும் வெற்றி பெற்றுள்ளன.

ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி 1999,2000, 2001ம் வருடங்களிலும், 2003,2004, 2005.2007 வருடங்களிலும் தொடர்ச்சியாக வெற்றிகளைப் பெற்றனர். சிவானந்தா வித்தியாலயம் 2010,2011. 2012 ம்வருடங்களில் தொடர்ச்சியான வெற்றியினைப் பெற்றுள்ளனர்.

திருகோணமலையில் போட்டி நடைபெறும் போது ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியும், மட்டக்களப்பில் போட்டி நடைபெறும் போது சிவானந்தா வித்தியாலயமும் வெற்றி பெறுவதே வழக்கமாக இருந்தது. இந்நிலமையை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி வீரர்கள் 2000ம் வருடம் மட்டக்களப்பில் போட்டி நடைபெற்ற போது அங்கு வெற்றியீட்டி வழமையை மாற்றி அமைத்தனர்.

2008ம் வருடம் 13வது போட்டி திருகோணமலையில் நடைபெற்றபோது சிவானந்தா வித்தியாலய அணியினர் வெற்றி பெற்று சொந்த மைதானத்திற்கு அப்பால் தமது முதலாவது வெற்றியை பதிவு செய்து கொண்டனர்.

ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி விளையாட்டு துறைபொறுப்பாசிரியர் சி.சசிகுமார் 1999ம் வருடம் போட்டிஆரம்பிக்கப்பட்டது முதல் 21வது போட்டி வரை பொறுப்பாசிரியராகவும் பயிற்றுவிப்பாளராகவும் இருந்து வருகின்றார்.




## எழுவானில் சித்திரை விழா 2014

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பில். கிழக்கு மாகாணசபை. மற்றும் மாகாண அமைச்சுக்கள் . திணைக்களங்களின் பங்களிப்புடன் எழுவானில் சித்திரை விழா 2014.04.24ம் திகதி வியாழக்கிழமை உவர்மலை சிறுவர் விளையாட்டு மைதானத்தில் நடாத்தப்பட்டது.
காலை 06மணி தொடக்கம் மாலை 07.00 மணிவரை மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்ட இந் நிகழ்விற்கு . கிழக்கு மாகாண கௌரவ ஆளுநர். மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சர் தலைமை வகித்தனர். இந் நிகழ்வில் கிழக்கு மாகாணசபை தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் அமைச்சுக்களின் செயலாளர்கள்.திணைக்களத்தலைவர்கள் .அரச அதிகாரிகள் என்போர் பங்குபற்றியிருந்தனர்.
கிழக்கு மாகாண அமைச்சுக்கள் .திணைக்களங்களில் கடமையாற்றுகின்ற அரச அலுவலர்களுக்கான பல போட்டிகள் நடாத்தப்பட்டதுடன். வெற்றி பெற்ற வீரர். வீராங்கனைகளுக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்பட்டது. இந் நிகழ்வில் பாரம்பரிய கலை நிகழ்வுகளும் ஆற்றுகை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# மலை முரசு குறுக்கெழுத்துப் புதிர் 006

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 17 | 18 | 2 | | 19 ல | |
| 20 | ■ | 3 பு | | 21 | | 22 | | |
| | 4 | | | | 5 | | | |
| 6 | | | | 7 | | | | ■ |
| ■ | 8 | 23 | | 9 | | | | 24 |
| 10 | | | | அ | ■ | | ■ | |
| 11 | ச | | ■ | 12 | 25 | | ■ | |
| 13 | | | | 26 | 14 | | | |
| 15 | | | ■ | 16 | | | ■ | |

### இடமிருந்து வலமாக

1. செயலாளர்
2. குற்றிக் காசுகள்
3. காயம்
4. உலகை இதன் மூலம் ஐந்தாக வகுத்துள்ளனர்
5. பறக்க விடுவது
6. கவிஞர்களுக்கு கட்டாயம் தேவையானது
7. அழகான விடயங்களை இவ்வாறு கூறலாம் -குழம்பியுள்ளது
8. கோலியாத்தைக் கொல்ல தாவீது பயன்படுத்திய ஆயுதம்
9. இலங்கையின் அரச தலைவர் - குழம்பியுள்ளது
10. பயணம் செய்யப் பயன்படுத்துவது
11. இருமல் நோய்
12. துன்பம் - தலைகீழாக உள்ளது
13. உலகம் - தலைகீழாக உள்ளது
14. மனிதக் கழிவு
15. இதனைச் செய்ய விரும்ப வேண்டும்
16. அழகான மலர் - அழகான பெண்களையும் இவ்வாறு அழைக்கலாம் - தலைகீழாக உள்ளது

### மேலிருந்து கீழாக

1. ....... நிலம் வேண்டும் பராசக்தி
2. சிற்பியால் உருவாக்கப்படுபவை
3. நல்லகுணத்தை இப்படியும் சொல்லலாம் - கீழிருந்து மேலாக
4. .................................... க் கற்க - நிற்க அதற்குத் தக
9. காதலுக்காக இறந்த இவளை இன்றும் நினைவு கொள்கின்றோம் - குழம்பியுள்ளது
17. குற்றம் செய்பவர்கள் அனுபவிப்பது
18. கடமைகளை இப்படியும் சொல்லலாம்- குழம்பியுள்ளது
19. இறந்த உடல் - குழம்பியுள்ளது
20. இந்த இயந்திரம் தான் உலகை இன்று இயக்குகின்றது
21. ....... இது பொய்யடா... காற்றடைத்த பையடா
22. இலங்கையின் பிரபல்யமான பண்டைய அரசு - கீழிருந்து மேலாக
23. காடு
24. தமிழினத்தின் பொதுப் பெயர் அல்லது வரலாற்றுப் பெயர்
25. கடிதம் - குழம்பியுள்ளது
26. உலகின் இறுதிக் காலம்

# முரசு குறுக்கெழுத்து புதிர் 005 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 வா | ழை | ச் | 15 சே | னை | ■ | 2 கு | க் | 16 [illegible] |
| 3 ண | 17 கி | சா | க் | ய | 18 ம் | 19 ஆ | 20 ரி | ல் |
| 4 ர | ண | 5 ம் | கி | த | டு | தி | த் | த |
| ம் | று | ■ | ழா | ■ | சு | ■ | தி | ■ |
| ■ | 6 ரா | ட | 7 ர் | 21 வே | ■ | 8 சு | ரா | 22 த |
| 23 க | ம | ■ | ■ | ள | 24 த | 9 ட் | இ | லி |
| 10 ம் | ப | ம் | 25 பி | 11 இ | ல் | டி | த | த் |
| ப | ன் | ■ | ம் | னி | 12 அ | ரி | 26 மா | ■ |
| 13 ன் | ல | க | த | ல் | 14 லை | வி | டு | த |

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம். இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 250, ரூபா 150, ரூபா 100 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

**போட்டி முடிவுத் திகதி : 01.05.2014**

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :
மலைமுரசு. இல - 159ஏ,
கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி

1. நீர் வட்டம் எனப்படுவது பின்வருவனவற்றுள் எது?
   1. நீர் வட்டவடிவில் ஓடுதல்
   2. நீர்வீழ்ச்சி ஆறாக ஓடி கடலுடன் கலத்தல்
   3. நீர் ஆவியாகி ஒடுங்கி, மழைமுகிலாகி, மழையாக மீண்டும் நிலத்தை அடைதல்.

2. சூரியனை ஒருமுறை சுற்றிவர 11.87 புவி வருட காலமெடுக்கும் கோள் எது?
   1. புளுட்டோ 2. புதன் 3. வியாழன்

3. 2008 வது வருடம் எத்தனையாம் நூற்றாண்டு?
   1. 20ம் நூற்றாண்டின் பிற்பகுதி 2. 21ம் நூற்றாண்டின் முற்பகுதி
   3. 21ம் நூற்றாண்டின் பிற்பகுதி

4. இவர் "ஸ்ரீபாத" எனும் நூலை வெளியிட்டவர். மக்கள் மாட்டிறைச்சியை உண்பதைத் தவிர்ப்பதற்கு அரும்பாடு பட்டவர். இவரே மருந்து மூலிகைகளைச் சேகரித்து இலவச மருத்துவ சாலையை ஸ்தாபித்தவர். இவர் யார்?
   1. கெப்பட்டிப்பொல திசாவை 2. வண. எஸ் மகிந்த
   3. கொங்காலே கொடபண்டா

5. மஸ்கெலிய ஓயாவில் உற்பத்தியாகி, ஹட்டன் பிரதேசத்தின் ஊடாகச் செல்லும் நீர்வீழ்ச்சி எது?
   1. லக்சபான 2. தியலும 3. துங்ஹிந்த

6. ஒரு கார் 20km செல்வதற்கு 1.5l பெற்றோல் தேவைப்படுகின்றது எனின், 10.5l பெற்றோலில் பயணம் செய்த தூரம் யாது?
   1. 7km 2. 140km 3. 120km

7. "காலையில் சூரியன் கிழக்குத் திசையில் காணப்படும். ஒருவர் காலையில் கிழக்கு நேக்கிச் சென்றால் நிழல் அவருக்குப் பின்னாலும் மேற்கு நேக்கிச் சென்றால் நிழல் அவருக்கு முன்னாலும் விழும்."
   இக்கூற்று பற்றி யாது கூறுவீர்?
   1. சரி 2. பிழை 3. யாதும் கூறமுடியாது

8. ரூபா 22.50 விலையுள்ள இரு கொப்பிகளும் ரூபா 17 விலையுடைய பேனாக்கள் மூன்றினையும் வாங்கி நூறு ரூபாய்த் தாளைக் கொடுக்கும் போது கிடைக்கும் மீதி எவ்வளவு?
   1. ரூபா 96 2. ரூபா 4 3. ரூபா 21

9. கடிகாரத்தின் நேரம் நான்கு மணியை அடையும்போது நிமிட முள் தென் மேற்குத் திசையில் அமைந்திருக்குமாயின், மணிமுள் எத்திசையைக் காட்டும்?
   1. தென் மேற்கு 2. தென் கிழக்கு 3. கிழக்கு

கீழுள்ள பாடலைக் கொண்டு 10,11ம் வினாக்களுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிக.

மீனினம் ஓடிப் பறக்குதம்மா - ஊடே
வெள்ளி ஓடம் தன்று செல்லுதம்மா
வானுங் கடலுமாக மாறுதம்மா - இந்த
மாட்சியிலுள்ளம் முழுகுதம்மா

10. இங்கு 'வெள்ளி ஓடம்' என்பதன் பொருள்?
    1. வால்வெள்ளி 2. நிலா 3. படகு

11. இப்பாடல் எவ்வேளைக்குரியது?
    1. மதியம் 2. அதிகாலை 3. இரவு

12. ஒளித்தொகுப்பிற்கு உதவும் ஆனால் வித்துமுளைத்தலுக்கு அவசியமில்லாத காரணி எது?
    1. வெப்பம் 2. நீர் 3. சூரியஒளி

13. 150 செ.மீ நீளமுள்ள ஓர் கயிற்றுத் துண்டின் நடுவில் 20 செ.மீ நீளமுள்ள பகுதி சேதமடைந்துள்ளது. அப்பகுதியை அகற்றி மீதி இருதுண்டுகளும் 5செ.மீ வீதம் ஒன்றின் மீது ஒன்று வைத்து ஒட்டப்பட்டன. தற்போது அக் கயிற்றுத் துண்டின் நீளம் யாது?
    1. 130 செ.மீ 2. 120 செ.மீ 3. 125 செ.மீ

14. அதிக நாட்கள் வாடாது இருக்கும் பூ எது?
    1. வாடா மல்லிகை 2. எக்சோரா 3. ஓர்க்கிற்

15. தேயிலை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம்?
    1. சபுகஸ்கந்த 2. தலவாக்கல 3. அகலவத்தை

16. 6 கிலோ 750 கிராம் சீனியை சமமான ஐந்து பக்கட்டுக்களில் அடைத்தால் ஒரு பக்கட்டில் உள்ள சீனியின் அளவு யாது?
    1. 1 கிலோ 350 கிராம் 2. 1 கிலோ 250 கிராம் 3. 1 கிலோ 450 கிராம்


17. 3140 நிமிடங்களை நாள், மணி, நிமிடத்தில் தருக?
    1. 2 நாள் 4 மணித்தியாலம் 20 நிமிடம்
    2. 2 நாள் 4 மணித்தியாலம் 2 நிமிடம்
    3. 2 நாள் 2 மணித்தியாலம் 20 நிமிடம்.



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**



இ. சுஜீசுதன்
தரம் 07
திருமலை



ஜே. அஸ்மிதன்
தரம் 09
திருமலை

**உங்கள் குழந்தைகளின் ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி :**
**மலைமுரசு. இல - 159ஏ,**
**கடற்கரைக் காட்சி வீதி, திருகோணமலை.**

# சிறுவர் முரசு



## சிந்திக்க .. ..

**நம்மிடம் எதுவும் இல்லை என்று நினைபபது ஞானம்**
**நம்மைத் தவிர எதுவும் இலலை என்று நினைப்பது ஆணவம்!!**

## சிங்கமும் கழுதைப்புலியும்

சிங்கமும் கழுதைப்புலியும் பசுவைப் பிடித்து வைத்திருந்தன. ஒரு நாள் சிங்கம் பசுவைக் கொன்றது. கழுதைப்புலி தன் குட்டியை சிங்கத்திடம் அனுப்பி தன் பங்கைக் கேட்டது. கழுதைப்புலியின் பங்காக பசுவின் குடலை மட்டும் கொடுத்து அனுப்பியது சிங்கம்.

கழுதைப் புலியோ, "நீ ஏன் குடலைக் கொண்டு வந்தாய்? அரைவாசிப் பங்குதானே நமக்கு உரியது?" என்று கேட்டது.


குட்டி கழுதைப்புலி சொல்லியது: 'நான் சின்னப்பயல். பெரியவர்கள் கொடுப்பதைத்தான் கொண்டு வர முடியும். நான் எப்படி சிங்கத்தோடு விவாதிக்க முடியும்'.

அதைக்கேட்டு கோபமான கழுதைப்புலி அந்தக் குடலோடு சிங்கத்தைப் பார்க்கப் போனது. சிங்கம் உணவை உண்டு குகைக்குள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது. கழுதைப்புலி வந்ததைக் கண்டு கண்களை அச்சமூட்டும் வகையில் வைத்திருந்தது. 'ஏன் இங்கே வந்தாய்?' - கர்ஜித்தபடி சிங்கம் கேட்டது.

பசுவில் பாதி கேட்க வந்த கழுதைப்புலி தற்போது தன் எண்ணத்தை மாற்றிக்கொண்டு பேசியது: "ராஜ சிங்கமே! நீங்கள் குடல் அனுப்பியதற்கு மிக்க நன்றி, ஆனால் அதனை உங்களிடமே சேர்க்க முடிவு செய்து விட்டோம்".

குடலை சிங்கத்திடம் கொடுத்து விட்டு திரும்பிய கழுதைப்புலியிடம் குட்டி கேட்டது: "பசுவில் பாதி கேட்கப்போன நீங்கள் குடலையும் கொடுத்து விட்டு வருகிறீர்களே? ஏன் அம்மா!"

"மகனே! சிங்கம் மிகக் கொடுரமாக இருந்தது. அதைக்கண்டு நடுங்கி விட்டேன். எனவே எனது பங்கையும் கொடுத்துவிட்டுப் பாராட்டி விட்டு வந்தேன். எல்லாம் நன்மைக்காக" என்றது தாய் கழுதைப்புலி.



**நம்மை விட வலிமையானவர்களைக் கோபப்படுத்துவதை விட அவர்களை சாந்தப்படுத்துவதே பாதுகாப்பானது.**

## குழந்தையின் தொடர் அழுகை??



குழந்தைகள் அழுவதுதான் அதன் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் என்பது பலரின் கருத்து. ஆனால் குழந்தைகள் தொடர்ந்து அழுவதால் அதன் மூளை வளர்ச்சி பாதிக்கப்படும் என்று சமீபத்திய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

நீண்ட நேரம் குழந்தை அழும்போது பெற்றோர்களின் கவனிப்பு இல்லாமல் போகும் பட்சத்தில் குழந்தைகளின் கற்றுக்கொள்ளும் திறன் குறைந்து போவதாகவும் மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர்.

குழந்தைகள் அழுவது பசியை தாய்க்கு உணர்த்தவே என்பது எல்லோரும் அறிந்தது. உடலில் உள்ள நோய்களையும், தனக்கு ஏற்படும் பிரச்சினைகளையும், தாய்க்கு உணர்த்த குழந்தைகளுக்கு இருக்கும் ஒரே வழி அழுகை மட்டும்தான். குழந்தைகள் நீண்ட நேரம் அழும்போது மன அழுத்தத்தை ஏற்படுத்தும் கார்டிசோல் ஹார்மோன் அதிக அளவில் சுரக்கிறது. இதனால் குழந்தைகளுக்கு மன அழுத்தம் ஏற்பட்டு மனநலம் பாதிக்கும் வாய்ப்புள்ளதாகவும் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

இருபது நிமிடங்கள் வரை குழந்தைகள் அழ அனுமதிக்கலாம். ஆனால் அதற்கு மேலும் யாருடைய கவனிப்பும் இன்றி அழுது ஓய்ந்து போகும் குழந்தைகள்தான் பாதிக்கப் படுகின்றனர். பாதிக்கப்பட்ட குழந்தைகளின் நடவடிக்கைகள் மற்ற குழந்தைகளிடம் இருந்து முற்றிலும் மாறுபட்டிருக்கும்.



இதனால் அவர்களின் எதிர்காலம் மிகப்பெரிய அளவில் பாதிக்கப் படுவதாக மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர்.

அவ்வாறு பாதிக்கப்படும் குழந்தைகள் கல்வி, விளையாட்டு போன்றவற்றில் சிறந்து விளங்குவதில்லை. ஆளுமைத் திறன் குறைந்து மந்தத்தன்மையோடு காணப்படுவார்கள் என்று ஆராய்ச்சியில் கண்டறிந்துள்ளனர்.

தொடரும் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. 16% பங்குலாபம் வழங்கும் கம்பனி ஒன்றின் ரூபா 10 பங்குகளை ரூபா 12 வீதம் வாங்குவதற்கு ஒருவர் 7200 ரூபாவை முதலீடு செய்தார். பங்குகளினுடைய மொத்தப் பெயர் மாத்திரைப் பெறுமானம் யாது?

02. மெல்லிய கம்பித் தடம் ஒன்றினால் 7cm ஆரையுடைய வட்டம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இவ்வட்ட கம்பித்தடம் வெட்டி நீட்டப்பட்டு சதுர வடிவத் தடமாக மாற்றப்பட்டுள்ளது. இச்சதுர வடிவ தடத்தின் பரப்பளவு யாது?

03. கூட்டல் விருத்தி ஒன்றின் n உறுப்புக்களின் கூட்டுத்தொகை $Sn = n^2 + 2n$ என்னும் சூத்திரத்தினால் தரப்படும். இவ்விருத்தியின் முதலுறுப்பு மற்றும் பொதுவித்தியாசத்தைக் காண்க.

04. எண் பரம்பல் ஒன்றில் முதலாம் காலணை 18உம் காலணை இடை வீச்சு 12 உம் ஆகும். இப்பரம்பலின் மூன்றாம் காலணையைக் காண்க?

**பகுதி 02**

01. பை ஒன்றினுள் வடிவத்தில் ஒத்த 4 சிவப்பு பந்துகளும், 3 நீல பந்துகளும் உள்ளன. மாணவன் ஒருவன் முதலில் எழுமாறாக ஒரு பந்தை எடுத்து அதன் நிறத்தைக் குறித்துக் கொண்டான். பின்னவ் அப் பந்தை பையினுள் இடாமல் இரண்டாவது தடவையாக வேறொரு பந்தை எடுக்கின்றான்.

1. மேற்குறித்த நிகழ்ச்சியின் மாதிரி வெளியை தெக்காட்டின் தளத்தில் குறித்துக் காட்டுக.

2. இரண்டாவதாக எடுக்கப்படும் பந்து சிவப்பாக இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க?

3. இரு தடவைகளிலும் எடுக்கப்பட்ட பந்துகளில் ஒன்று சிவப்பாகவும் மற்றையது நீலமாகவும் இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க?

02.
அ. கூட்டல் விருத்தி ஒன்றின் ஐந்தாம் உறுப்பு 15உம் ஒன்பதாம் உறுப்பு 39உம் ஆகும். இவ்விருத்தியின்,

1. முதலுறுப்பு, பொது வித்தியாசம் என்பவற்றைக் காண்க.

2. nஆம் உறுப்புக்கான கோவையைத் தருக.

3. முதல் 12 உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க.

4. 88 இத்தொடரின் ஓர் உறுப்பாகுமா?

ஆ. 96 இற்கும் 6 இற்கும் இடையில் மூன்று பெருக்கல் இடைகளைக் காண்க.

03. நபர் ஒருவர் ரூபா 50000 ற்கு கொள்வனவு செய்த குளிர்சாதனப் பெட்டி ஒன்றை 50 இலாபத்தில் விலை குறித்து பின்னர் 20 கழிவில் விற்கின்றார்.

1. குளிர் சாதனப் பெட்டியின் குறித்த விலை யாது?

2. குளிர் சாதனப் பெட்டியின் விற்ற விலை யாது?

3. விற்றுப் பெற்ற பணத்தை 11எளியவட்டி வழங்கும் நிறுவனம் ஒன்றில் 2 வருடங்களுக்கு வைப்பிலிடுவதினால் பெறப்படும் வட்டிப் பணம் எவ்வளவு?

4. அப்பணத்தை 10 கூட்டு வட்டி வழங்கும் வங்கியில் 2 வருடங்களுக்கு வைப்பிலிட்டால் பெறப்படும் கூட்டுவட்டி எவ்வளவு?
எது இலாபகரமானது என அவருக்கு அறிவுரை வழங்குக.

.04. 70cm விட்டமும் 1cm உயரமும் உடைய உருளை வடிவ நீர்த்தாங்கி ஒன்றின்
அ. உருளையின் அடி வட்டத்தின் ஆரை யாது?
ஆ. வட்டக் குறுக்கு வெட்டுத் தோற்றத்தின் பரப்பளவு யாது?
இ. தாங்கியின் கொள்ளளவை ml இல் தருக.
ஈ. 7cm, 14cm விட்டமுடைய என்னும் இரு நீர்ப்பம்பிகள் முறையே 20, 5 வேகங்களில் தாங்கியினுள் நீரைப் பாய்ச்சுகின்றது. தாங்கியை முற்றாக நீரால் நிரப்புவதற்கு எடுக்கும் நேரத்தைக் காண்க.

05. தற்போது தந்தையினதும் மகனினதும் வயதுகளிற்கிடையிலான விகிதம் 4:1 ஆகும். 6 வருடங்களுக்கு முன்னர் தந்தையினதும், மகனினதும் வயதுகளுக்கிடையிலான விகிதம் 7:1 ஆகும். தற்போது மகனின் வயது t வருடங்கள் எனின்,
அ. தற்போது தந்தையின் வயதை t சார்பில் தருக.
ஆ. 6 வருடங்களுக்கு முன்னர் தந்தையினதும் மகனினதும் வயதுகளுக்கிடையிலான விகிதத்தை சார்பில் தருக.
இ. விகிதசமன் தொடர்பை எழுதுவதன் மூலம் தந்தையினதும் மகனினதும் தற்போதைய வயதுகளைக் காண்க?
ஈ. இன்னும் வருடங்களில் தந்தையின் வயது மகனின் வயதின் இரு மடங்காகும் எனின், இல் ஓர் சமன்பாட்டை அமைத்து ஐக் காண்க.

**கணிதம் வழிகாட்டல் :**

**திருமலையின் பிரபல ஆசிரியர்**

**MATHS**
Personal Classes Year 06, 07, 08, 09, 10 & G.C.E (O/L)
**T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**
G.C.E (O/L) பிரதி சனி தோறும்
பரீட்சைக்குச் சகல மாணவர்களும் பங்குபெற்றலாம்.

## பாடம் : விஞ்ஞானம்

1. குருதியில் இருக்கும் பின்வரும் சிறுதுணிக்கை வகைகளுக்கிடையே கருவைக் கொண்டிராத சிறுதுணிக்கை வகை யாது?
1. ஒற்றைக் குழியங்கள் 2. நிணநீர்க் குழியங்கள்
3. சிறு தட்டுக்கள் 4. இயோசினாடிகள்

2. அமிழ்ந்த இலைவாய்கள் உள்ள இலைகள் எந்தச் சூழலில் வாழ்வதற்கு இசைவாக்கமடைந்த தாவரங்களில் இருக்கும்?
1. நீரினுள்ளே அமிழ்ந்திருப்பதற்கு
2. நீரின் மீது மிதந்து கொண்டு இருப்பதற்கு
3. உலர்ந்த காலநிலை இருக்கும் பிரதேசங்களில் வளர்வதற்கு
4. நல்ல ஈரலிப்பு உள்ள பிரதேசங்களில் வளர்வதற்கு

3. மனித உடலில் சமநிலையைப் பேணுவதற்குப் பின்வருவனவற்றில் எது உதவுகின்றது?
1. நத்தைச்சுருள் 2. செவிச்சிற்றென்புகள்
3. செவிப்பறை மென்சவ்வு 4. தலைவாயில் உபகரணம்

4. திரவம் ஒன்றினுள்ளே இருக்கும் புள்ளி ஒன்றில் உள்ள அமுக்கத்திற் செல்வாக்குச் செலுத்தாத காரணி எது?
1. திரவத்தின் அடர்த்தி 2. திரவத்தின் கனவளவு
3. ஈவையினாலான ஆர்முடுகல்
4. சுயாதீன மேற்பரப்பில் இருந்து அப்புள்ளியின் ஆழம்

5. மனிதர்களிடையே காணப்படும் பரம்பரை நோயாக அமையாதது எது?
1. கழலை 2. குருதியுறையா நோய்3. நிறக்குருடு
4. அரிவாட் கலக் குருதிச்சோகை

6. இயக்கு நரம்பின் தொழில்
1. தெறிப்பு வில்லில் மாத்திரம் பங்குபற்றல்
2. மூளையிலிருந்து முண்ணானுக்கு மாத்திரம் கணத்தாக்கங்களைக் கொண்டு செல்லல்
3. மைய நரம்புத் தொகுதியிலிருந்து தசைகளுக்குக் கணத்தாக்கங்களைக் கொண்டு செல்லல்
4. புலனங்கங்களிலிருந்து மைய நரம்புத் தொகுதிக்குக் கணத்தாக்கங்களைக் கொண்டு செல்லல்

7. பயிரிடும் பணிகளில் பல்வேறு தொழில்களுக்காக தாவர ஓமோன்களைப் பயனுறுதி வாய்ந்த விதத்தில் பிரயோகிக்கலாம். எனினும் தாவர ஓமோன்கள் நிறைவேற்ற முடியாத ஒரு தொழில்
1. சிறு கிளையை வேர்விடச் செய்தல்
2. களைகொள்ளியாகச் செயற்படச் செய்தல்
3. பருவமல்லாத போது பூக்களும் காய்களும் உண்டாகச் செய்தல்.
4. பீடைகொல்லியாகச் செயற்படச் செய்தல்

8. இரண்டு நரம்புக் கலங்கள் சந்திக்கும் இடம் எவ்வாறு அழைக்கப்படும்?
1. இரன்வியரின் கணு 2. நரம்பு நாருறை
3. நரம்பிணைப்பு 4. உட்காவு நரம்பு முனை

9. வன்கூட்டுத்தசையின் இயல்புகளைப் பின்வரும் எந்த விடை சரியாகக் குறிப்பிடுகின்றது?
1. வரிகள் உள்ளது, இச்சைவழி இயங்குகின்றது.
2. வரிகள் உள்ளது, இச்சைவழி இயங்காதது.
3. வரிகள் இல்லாதது, இச்சைவழி இயங்குகின்றது.
4. வரிகள் இல்லாதது, இச்சைவழி இயங்காதது

10. , எனப் பெயரிடப்பட்ட இரு ஒத்த முகவைகளிலே ஒரே வெப்பநிலையில் நீரின் சம கனவளவுகள் இருக்கின்றன. இற்கு வெப்பமாக்கப்பட்ட 500 திணிவுள்ள ஓர் இரும்புத் தராசுப்படியும் அதே வெப்பநிலைக்கு வெப்பமாக்கப்பட்ட 10 திணிவுள்ள ஓர் இரும்பு ஆணியும் முறையே , ஆகியவற்றின் உள்ளே ஒரே கணத்தில் இடப்பட்டு, ஒத்த நிலைமைகளில் இருக்கவிடப்பட்டன. ஒரு நிமிடத்திற்குப் பின்னர் முகவையில் இருக்கும் நீரின் வெப்பநிலை பற்றிய சரியான கூற்று பின்வருவனவற்றில் யாது?
1. யின் வெப்பநிலை யின் வெப்பநிலையிலும் கூடியது.
2. யின் வெப்பநிலை யிற்கு சமன்
3. யின் வெப்பநிலை யின் வெப்பநிலையிலும் குறைந்தது.
4. , ஆகியவற்றின் வெப்பநிலைகளை எதிர்வு கூற முடியாது.

11. பின்வரும் எந்த அங்கிகள் அழுகல் தாவரம் எனப்படும்?
1. தமது உணவை தாமே உற்பத்தி செய்யும் அங்கிகள்
2. வேறு அங்கிகளை உணவாகக் கொள்ளும் அங்கிகள்
3. இறந்த விலங்குப் பகுதிகளையும், தாவரப் பகுதிகளையும் சார்ந்திருக்கும் அங்கிகள்
4. பச்சைத் தாவரங்களை மாத்திரம் உணவாகக் கொள்ளும் அங்கிகள்

12. பிரிமென்றகடு என்பது வயிற்றுக் குழியில் இருந்து நெஞ்சறைக் குழியை வேறுபடுத்தும் தசை சுவராகும். இதன் பிரதானமான தொழில் யாது?
1. நெஞ்சறையில் உள்ள அங்கங்களும், வயிற்றில் உள்ள அங்கங்களும் தொடுகையுறுவதைத் தடுத்தல்
2. உட்சுவாசத்திற்கும், வெளிச்சுவாசத்திற்கும் உதவுதல்
3. வயிறு வெளியே தள்ளப்பட்டிருப்பதைத் தடுத்தல்
4. நுரையீரல்கள், இதயம் போன்ற அங்கங்களை தாங்கியிருத்தல்

13. மூன்று விசைகளின் நாப்பத்தின் (சமநிலை) மூலம் பின்வரும் எச்சந்தர்ப்பத்தை விளக்கலாம்?
1. விற்றராசில் தொங்கவிடப்பட்டுள்ள ஒரு பொருளின் சமநிலை
2. நீரில் மிதக்கும் ஒரு பொருளின் சமநிலை
3. நிறைகள் (படிக்கற்கள்) இடப்படும் ஒரு சாதாரணத் தராசின் சமநிலை
4. மேசையில் வைக்கப்பட்டிருக்கும் ஒரு புத்தகத்தின் சமநிலை

14. இலங்கையை அண்டிய கடல் தளத்தில் வாயு எரிபொருள் படிவு இருப்பதாக அண்மையில் அறிவிக்கப்பட்டது. அப்படிவில் பிரதான கூறாக இருப்பதற்கு அதிக வாய்ப்பு உள்ள வாயு எது?
1. நைதரசன் 2. நேயன் 3. மெதேன் 4. கந்தகவீரொட்சைட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளைமணல்....

எல்லைகள் அடையாளமிடப்பட்டு, முட்கம்பி வேலிகளும் போடப்பட்டு, இந்த நிலம் விமானப்படைக்குரியது என்கிற அறிவிப்பு பலகைகளும் அந்த பகுதியில் நடப்பட்டுள்ளன. இந்தக் காணிகள் எல்லாம் அரசாங்கத்திற்கு சொந்தமான காணிகளாக இருந்தாலும் அந்த காணிப்பிரதேசம் உள்ளூர் மக்களால் கால்நடை வளர்ப்பு , கருங்கல் உடைப்பு மற்றும் பயிர்ச்செய்கை என பல்வேறு தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்டு வந்ததாக கூறப்படுகின்றது.

விமானப்படையின் இந்தக் காணி சுவீகரிப்பு காரணமாக அந்தக் பகுதி மக்களின் வாழ்விடமும், வாழ்வாதாரமும் இழக்கப்படுவதோடு அவர்களின் அன்றாட செயல்பாடுகளுக்கான சுதந்திரமும் இழக்கப்படுவதாக வடக்கு- கிழக்கு சிங்கள அமைப்பு குற்றம் சாட்டுகின்றது.

வடக்கு- கிழக்கு சிங்கள அமைப்பானது யுத்த காலத்தில் விடுதலைப்புலிகளுக்கு எதிராகவும் இராணுவத்திற்கு ஆதரவாகவும் கிழக்கு மாகாணத்தில் பல்வேறு வேலைத்திட்டங்களில் ஈடுபட்ட கடும் போக்குடைய சிங்கள அமைப்பாக பார்க்கப்படுகிறது.

விமானப்படையினரால் குறித்த காணி சுவீகரிக்கப்படுவது தொடர்பாக கருத்து வெளியிட்ட அந்த அமைப்பின் தேசிய அமைப்பாளரான அனுர பண்டார, 3500 தொடக்கம் 4000 ஆயிரம் ஏக்கர் வரையிலான காணி விமானப் படையினரால் அடையாளமிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார். அந்த பகுதியில் தற்போது விமானப்படைக்கு குழாய் நீர் விநியோக வேலைகளும் இடம் பெற்று வருவதால் நிரந்தர முகாமொன்று அமையலாம் என்றும் அவர் சந்தேகம் வெளியிட்டார்.

வெள்ளைமணல் பகுதியை பொறுத்தவரை அநேகமாக முஸ்லிம்களே வாழ்ந்து வரும் கிராமம் என்று கூறிய அனுர பண்டார, இந்தக் காணி சுவீகரிப்பு விடயத்தில் அவர்கள் பயம் காரணமாக வாய் திறக்க முடியாதவர்களாகக் காணப்படுவதாகக் கூறினார்.

போருக்கு பின்னர் கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பு படையினரின் தேவைகளுக்கு காணி தேவைப்படுமானால், அதுகுறித்து மாகாண முதலமைச்சரின் ஆலோசனை பெறப்படும் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஸ தன்னிடம் தெரிவித்துள்ளதாக ஏற்கனவே மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் தெரிவித்திருந்தார்.

விமானப்படையினரால் சுவீகரிக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் குறித்த இந்தக் காணி விவகாரத்தில் முதலமைச்சரின் ஆலோசனை பெறப்பட்டதா? என்பது தொடர்பில் முதலமைச்சரின் பதிலைப் பெற பல தடவைகள் முயன்ற போதிலும் அவரது தொடர்பு கிடைக்கப் பெறவில்லை" என்றும் தெரிவித்துள்ளது.

## 6 மாதக் குழந்தையுடன்....

இவர்களது மூத்த குழந்தைக்கு சுமார் 12 வயதாகவே இருப்பதுடன். அக் குழந்தையின் பொறுப்பில் ஏனைய மூன்று குழந்தைகளும் பகல்பொழுது முழுவதும் விடப்படுவதாக தெரிகின்றது. பாடசாலைக்கும் குழந்தைகள் அனுப்பப்படுவதில்லை.

இவ்விடயம் உரிய பிரதேசத்தின் கிராம சேவை அலுவலருக்கும் தெரியப்படுத்தப்பட்டதாகவும் அதனைத் தொடர்ந்து பிரதேச மக்களால் குச்சவெளி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டும் உள்ளது.

எனினும் அவ்விரு தரப்பினரதும் எந்தவொரு நடவடிக்கையும் இச் செயற்பாட்டை நிறுத்தவில்லை.

அயலவர்கள் மற்றும் கிராமத்தவருடன் சுமுகமான உறவுகள் எதனையும் அக்குடும்பத்தினர் கொண்டிருக்கவில்லை எனத் தெரிய வருகின்றது. அண்மையில் அக் குடும்பத்தினரால் காவல்துறைக்கு முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பாக விசாரணைக்குச் சென்ற கிராம மக்களிடம் காவல்துறை அக்குடும்பத்தின் பெண்மணிக்கு மனநோயிருப்பதாகத் தெரிவித்ததாகவும் தெரிகின்றது.

இவ்விடயம் தற்போதுவரை சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு தெரியபப்டுத்தப்படாதது ஏன் என்ற கேள்வி எழுந்துள்ள நிலையில் மலைமுரசின் ஊடாக இத்தகவல் குறித்த அதிகார சபைக்கு தெரியப் படுத்தப்பட்டுள்ளது.

## புனித மரியாள்....

பிரதேசச் செயலாளருக்கு பாரப் படுத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக தனது 11ம் திகதியக் கடிதம் மூலம் பிரதேசச் செயலாளருக்கு இவ்விடயத்தைப் பாரப்படுத்தியுள்ளதுடன் அக்கடிதத்தின் பிரதியை மாவட்டச் செயலர் நகரசபை உறுப்பினர் சி.நந்தகுமாருக்கு அனுப்பியுள்ளார்.

பிரதேசச் செயலரான திருமதி.ஜலதீபன் புனித மரியாள் கல்லூரியின் பழைய மாணவி என்பது குறிப்பிடத்தக்கது.

## பாசிக்குடாவில்....

ஏக்கர் நிலப்பரப்பில் சுற்றுலாப் பயணிகளுக்கான விடுதி வசதிக்காக மேற்கொள்ளப்படவுள்ளன. அங்கு வதியும் சுற்றுலாப் பயணிகள் அக்காலத்தில் இயற்கையுடன் இணைந்தவகையில் இப் பூங்காவில் தமது காலத்தைக் கழிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அப் பிரதேசத்தில் தெங்கு உள்ளீட்டுடன் கூடிய உள்நாட்டு உற்பத்திப் பொருட்களை உருவாக்கும் கைத்தொழில்களையும் மேம்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்த் தேசியத்தின்...

இந்த சமுகத்தில் இருந்து அன்னியப்படுத்தலாம் என ஆக்கிரமிப்பாளர்கள் எண்ணுகின்றனர். செயல்படுகின்றனர்.

வேலிகள் பயிரை மேய்வது சர்வ சாதாரணமாகிவிட்டது. நீதியில் இனவாதம் புகுந்து நிற்கின்றது. தமிழ் மக்கள் இம்சைப்படுத்தப்படுவது வகை தொகையின்றி அரங்கேறுகின்றது.

அண்மைக்காலமாக தமிழ் மக்களின் தேசிய பற்றுணர்வையும் அதற்கு பலமாக இருக்கக்கூடிய சக்திகளையும் எவ்வகையிலாவது பலவீனப்படுத்த வேண்டும் என்ற தோரணையில் பல சம்பவங்கள் அரங்கேற்றப்படுவதை நம்மக்களில் அநேகம்பேர் அறிவார்கள்.

போருக்கு பின்னதான இதுவரையான ஆண்டுகளில். ஜனநாயக சூழலிலும் தமிழர்களின் அபிலாசைகள் மேலோங்கி நிற்பதைத் தடுக்க மழைக்காளான் போல பல விடயங்கள் அரங்கேற்றப் பட்டுவிட்டன.

இடையில் கிறிஸ் மனிதன் வந்துபோன கதையை அதன் பின்னணியை மக்கள் அறிவார்கள். எனவே அதர்மக்காரர்களால் அரங்கேற்றப்படுகின்ற இத்தகைய அசம்பாவிதங்கள் தமிழ் மக்களுக்கு புதிது அல்ல.

இதன் மூலம் ஒருபோதும் தமிழ்மக்களின் சுதந்திரமாய் வாழ்வது நோக்கிய அபிலாசைகளை புதைத்து விடமுடியாது மாறாக சுடசுட பளபளக்கும் தங்கமாய் தமிழர் கனவுமாறும்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் குருநகரை சேர்ந்த 23 அகவுடைய ஜெரோம் கொன்சலிற்றா என்ற இளம்பெண் கிணற்றுக்குள் சடலமாக மீட்கப்பட்ட சம்பவத்தின் பின்னால் நடந்திருக்கக்கூடிய கிறிஸ்தவமத ஆயர்கள், அருட் தந்தையர்கள், அருட் சகோதரர்கள் மீதான விமர்சனங்களும் கண்டனங்களும் இயல்பாக மரணித்த கொன்சலிற்றாவின் குடும்பத்தின் துயரம், குமுறல்கள், கோபங்கள், முனைப்புக்கள் என்பவற்றை கடந்து இச்சம்பவத்தை விசமிகள் பலர் வேறு திசையில் கொண்டுசெல்ல முயல்வதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

கொன்சலிற்றாவின் மரணம் தொடர்பில் நீதி விசாரணை நடக்கின்றது. அந்த மரணத்துக்கு யார் காரணமாக இருந்தாலும் அவர் எந்த மதத்தை சேர்ந்தவராக இருந்தாலும் அவர் தண்டிக்கப்பட வேண்டியவரே.

ஆனால் இந்த சம்பவத்தைக் காரணமாகக் காட்டி தருணம் பார்த்திருந்த பலவிசமிகள் கிறிஸ்தவ மதத்தின்மீதும் அதன் குருபீடங்கள், குருவானவர்கள் மீதும் அவதூறுகளை விதைத்து தமிழ் மக்களில் இருந்து கிறிஸ்தவ மதம் சார்ந்த தேசிய பற்றுணர்வுள்ள ஆயர்களையும், அருட்தந்தையர்களையும், அருட்சகோதர சகோதரிகளையும் அவர்தம் கருத்துக்களையும் பிரிப்பதற்கும் அன்னியப்படுத்துவற்கும் முனைகின்றனர்.

இது மிகவும் கண்டிக்கத்தக்கது. தமிழர்களின் வரலாற்றில் குறிப்பாக 50களின் பின் தமிழர் போராட்டத்தில் மிகப்பலமான நீதியின் குரலாக கிறிஸ்தவ மதகுருமார்களின் பணி இருந்து வந்திருக்கின்றது.

தேவாலயங்கள் குண்டு வீசித்தாக்கப்பட்டுள்ளன. அங்கே தஞ்சமடைந்த தமிழர்கள் எறிகணைகளால் கொன்று குவிக்கப்பட்டிருக்கின்றார்கள். அருட்தந்தையர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். கடத்தப்பட்டிருக்கின்றார்கள். காணாமல் போயிருக்கின்றார்கள்.

போருக்குள் மனித உரிமைக்காவலர்களாக இருந்திருக்கின்றார்கள். இன்று போரின் பின்னதான காலத்தில் போரில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட பெருங்கொடூரத்தை உலகுக்கு உரைக்கும் சாட்சிகளாக கிறிஸ்தவ மதகுருமார்களே முன்னிலை பெற்று தர்மத்தின் சாட்சிகளாக இருக்கின்றார்கள்.

மன்னார், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆயர்களும் அவர்களால் வழிநடத்தப்படும் அருட்தந்தையர்களும் தமிழ் மக்களுக்கான ஒரு வசந்த காலத்துக்காக பணி செய்கின்றார்கள்.

இறைவனை மன்றாடுகின்றார்கள். குறிப்பாக மன்னார் ஆயர் பெருந்தகை இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் மீது இன்று சிங்கள பேரினவாத அமைப்புக்கள் மிகுந்த கோபம் கோண்டு அவர் மீது தான்தோன்றித்தனமான அறிக்கைகளை வாரி இறைப்பதை எமது மக்கள் அறியவேண்டும்.

கிறிஸ்தவ சகோதரர்கள் மீது பேரினவாதிகளின் கோபம் இன்று குவிந்துள்ளது. காரணம் இவர்கள் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை வெளிக்கொண்டு வருவதே. எனவேதான் இப்போது போரினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அநாதை பிள்ளைகளுக்கு உதவுகின்ற அருட்தந்தையர்களை நோக்கி பாலியல் விபசாரம் என கதைகளை அவிழ்த்துவிடுவது மட்டுமல்ல,

புனிதமான இந்து மதத்தின் பேரால் கிறிஸ்த்துவ மத பெரியார்களுக்கு எதிராகப் துண்டுப்பிரசுரங்களையும் அச்சடித்து அரங்கேற்றி வருகின்றார்கள்.இவற்றையெல்லாம் யார்செய்வார்கள் என்பதை எமது மக்கள் உய்த்தறிவது அதிகம் கடிமானதே அல்ல.

எனவே மதங்களை மோதவிட நினைக்கும் விசமிகள் தொடர்பில் தமிழ் மக்கள் விழிப்புணர்வுடன் இருக்கவேண்டிய காலம் இது. தெற்கில் இஸ்லாமிய சகோதரர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள இனவாத மதவாத குரல்களை அடக்குமுறைகளை வடக்கு கிழக்கிலும் பரப்பி இங்கு கிறிஸ்தவ சகோதரர் மீதும் மேற்குலக மக்களால் அதிகம் பின்பற்றப்படும் கிறிஸ்தவ மதத்தின்மீதும் இன்று சர்வதேசச்சூழல் மீதுள்ள வெறுப்பை பேரினசக்திகள் காட்டமுனைகின்றன.

எனவே தருணங்களை காத்திருந்து அல்லது சந்தர்ப்பங்களை உருவாக்கி எமது சமூகத்தைக் கூறுபோட்டு கலவரங்களைத் தூண்டி, எமது தேசிய பிரச்சனையை திசை திருப்ப முயலும் சக்திகளுக்கு பலியாகாமல் தமிழ் மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டியது அவசியமானது என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அகத்தியர்....

பொதுமக்கள் வழிபடுவதற்குத் தடை செய்யப்பட்டுள்ள அகத்தியர் ஸ்தாபனத்திற்கு சென்றிருந்த மூதூர் பிரதேச இந்துக்குருமார் சங்கத்தின் முக்கிய உறுப்பினர்கள் ஆறு பேரும் அங்கு அரை மணி நேரத்திற்கும் மேல் உலாவ அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காவல்துறையின் பாதுகாப்பில் உள்ள அப்பிரதேசத்தின் கட்டுமாணப்பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருப்பது தெரிந்ததே.

## 2016ல் இலத்திரனியல் அடையாள அட்டைகள்

2016 ஆம் ஆண்டு முதல் காலாண்டுக்குள் நாடளாவிய ரீதியில் விநியோகிக்க எதிர்ப்பார்க்கப்படும் இலத்திரனியல் அடையாள அட்டை தொடர்பில் தகவல்களை சேகரித்து கணினி மயப்படுத்தும் நடவடிக்கைகள் எதிர்வரும் ஜுலை முதலாம் திகதியிலிருந்து ஆரம்பமாவதாக ஆட்பதிவு திணைக்களத்தின் ஆனணயாளர் நாயகம் ஆர்.எம்.எஸ்.சரத் குமார் தெரிவித்தார்.

பழைய சாதாரண அடையாள அட்டைகளை பயன்படுத்துவோருக்கு இந்த இலத்திரனியல் அடையாள அட்டையை பெற்றுக்கொள்ளுமாறு நாம் வற்புறுத்தவில்லை. எனினும் அவர்களும் பெற்றுக்கொள்ளலாம். அதுவே ஏனைய நடவடிக்கைகளின் போது இலகுவானதாக அமையும் என சுட்டிக்காட்டினார்.

## தோணி கவிழ்ந்து மீனவர் பலி

வாகரை காவல் பிரிவுக்கு உட்பட்ட வெள்ளையடிமடு வாவியில் வியாழக்கிழமை (24) மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது, தோணி கவிழ்ந்ததில் வெள்ளையடிமடு கிராமத்தைச் சேர்ந்த மீனவரான இராஜேந்திரா ரஜிகாந் (வயது 18) என்பவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக வாகரை காவல்துறையினர் தெரிவித்தனர்.

கட்டு வலையில் மீன்கள் பிடிபட்டுள்ளதாவென்று தோணியிலிருந்தவாறே இவர் வலையை எடுத்துப் பார்க்க முற்பட்டபோது, இந்த அனர்த்தம் இடம்பெற்றதாக ஆரம்பக்கட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக வாகரை மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

உண்மையை உலகுக்குச் சொல்லக் கூடிய பத்திரிகையாளர்கள் தேவை - 075 4252042

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அழகிய முகமன்

வேலையிலிருந்தோ, வெளியூர் பயணத்திலிருந்தோ அல்லது எங்கிருந்து வீட்டுக்கு வந்தாலும் நல்ல வாழ்த்துக்களைத் தெரிவித்தவாறு வீட்டில் நுழையுங்கள்.

மலர்ந்த முகத்துடன் ஸலாம் சொன்னவாறு மனைவியைச் சந்தியுங்கள். ஸலாம் சொல்வது நபிமொழி மட்டுமல்லாது உங்கள் மனைவிக்கு நீங்கள் செய்யும் பிரார்த்தனையும்கூட. அவளுடைய கைகளைப் பற்றி குலுக்கி 'முஸாபஹா' செய்யலாம். வெளியில் சந்தித்த நல்ல செய்திகளைத் தெரிவித்துவிட்டு மற்ற செய்திகளை வேறு சந்தர்ப்பத்திற்காகத் தள்ளி வையுங்கள்.

இனிப்பான சொல்லும் பூரிப்பான கனிவும் நேர்மறையான நல்ல வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்து பேசுங்கள். எதிர்மறையான வார்த்தைகளைத் தவிர்த்து கொள்ளுங்கள்.

உங்களின் வார்த்தைகளுக்கு மனைவி பதில் கொடுக்கும் பொழுது செவிதாழ்த்துங்கள். தெளிவான வார்த்தைகளைக் கொண்டு பேசுங்கள். அவள் புரிந்து கொள்ளவில்லையெனில் மீண்டும் மீண்டும் சொல்லுங்கள்.

மனைவிக்காக நேரத்தை ஒதுக்குங்கள். நல்ல விஷயங்களை அவளுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

நீங்களிருவரும் ஆனந்தமாகக் கழித்த



அனுபவங்களை இருவரும் தனித்து இருக்கும்பொழுது மீட்டிப் பாருங்களேன். நகைச்சுவையுடன் கல கலப்பாகப் பேசி அவளின் பிரச்சினைகளை மறக்கடியுங்கள். ஒருவருக்கொருவர் போட்டி போட்டு, பந்தயங்களில் ஈடுபடுங்கள். அது விளையாட்டாகவோ, குர்ஆன், நபிமொழி, பொதுஅறிவு போன்ற கல்விகளைக் கற்பதிலோ அல்லது வேலை செய்வதிலோ இருக்கலாம்.

இஸ்லாம் அனுமதித்த விஷயங்களை (விளையாட்டுப் போட்டிகள் போன்றவை...) பார்ப்பதற்கு வெளியில் அழைத்துச் செல்லுங்கள்.

இஸ்லாம் அனுமதிக்காத 'பொழுது போக்கு" விஷயங்களில் (சினிமா, ஸீரியல்கள் போன்றவற்றில்) உள்ள தீங்குகளை எடுத்துச் சொல்லி அவற்றை மறக்கடியுங்கள்.

## அல்லாஹுத்த ஆலா அல்குர் ஆனில் கூறுவது:

நேர்வழி இதுதான் எனத்தெளிவாகிய பின்பும் யார் தூதருடன் பிளவுபட்டு மு.்.மின்களுடைய பாதையல்லாத வேறொன்றை பின்பற்றுகிறாரோ அவர் செல்கின்றவாறே நாம் அவரைச் செல்லவிடுவோம். பின்பு அவரை நாம் நரகத்தில் சேர்த்து விடுவோம்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களோடு பிளவுபட்டவர் மாத்திரமின்றி மு.்.மின்களின் பாதையைப் பின்பற்றாதவர்களுக்கும் நரகம் உண்டு என்பதை இவ்வசனம் தெளிவுபடுத்துகின்றது. நிச்சயமாக இவ்வசனம் இறக்கப்படும்போது மு.்.மின்களாக இருந்தவர்கள் ஸஹாபாக்கள் என்பதில் எவருக்கும் சந்தேகமில்லை. ஆகவே, அவர்களுடைய வழியை நாமும் பின்பற்ற வேண்டும் என்பதை இவ்வசனம் குறித்து நிற்கின்றது.

மேலும் அல்லாஹுத்தஆலா கூறுகின்றான்: அவர்கள் நீங்கள் ஈமான் கொண்டதைப்போல் ஈமான் கொண்டால் நேர்வழி அடைவார்கள். அவர்கள் புறக்கணித்தால் அவர்கள் நிச்சயமாக பிளவிலேயே இருக்கின்றனர்.

அல்பகறா: 137

இந்த வசனத்தில் அவர்கள் என்பதன் மூலம் நாடப்பட்டவர்கள் காபிர்களாவார்கள். நீங்கள் என்பதன் மூலம் நாடப்பட்டவர்கள் ஸஹாபாக்களாவார்கள்.

ஏனென்றால், இவ்வசனம் இறக்கப்படும்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களோடு இருந்தவர்கள் அந்த ஸஹாபாக்களே. ஆகவே, யாராயினும் ஸஹாபாக்கள் ஈமான் கொண்டதைப்போல் ஈமான் கொள்ளாவிட்டால் அவர் பிளவிலேயே இருக்கின்றார் என்பதை இவ்வசனம் தெளிவுபடுத்துகின்றது.




# பிள்ளைகளைத் தனியாக தூங்க விடவேண்டிய காலம்

இரண்டாவது குழந்தை பிறந்த நேரத்தில் முதல் குழந்தையை எங்கே படுக்கவைப்பது என்பதில் பிரச்சினை ஏற்படுகிறது. இதுவே கிராமங்களாக இருந்தால் விசாலமான வீட்டில் தாத்தா பாட்டி வசம் முதல் குழந்தை ஒப்படைக்கப்படுகிறது. அதனால் முதல் குழந்தை தனிமை, இருட்டு, இட நெருக்கடி போன்ற சூழலுக்குத் தப்பி விடுகிறது.

அதேசமயம் ஒண்டுக்குடித்தன நகர வீடுகளில் முதல் குழந்தையின் நிலை சொல்லிக் கொள்ளும்படியாக இல்லை. இந்த மாதிரியான நெருக்கடிக்கு உள்ளாகும் முதல் குழந்தைகள், பெற்றோரின் இரண்டாவது குழந்தையை தங்கள் எதிரியாக பார்க்கத் தொடங்கி விடுகின்றன.

இத்தகைய மனக்கசப்பு மூத்த குழந்தைகளுக்கு ஏற்பட்டு விடாதபடி பெற்றோர் கவனமாக இருக்கவேண்டும். முதல் குழந்தை தனிமைப்படுத்தப்பட்டு விட்டதாக எண்ணாத அளவுக்கு அந்தக் குழந்தையையும் தங்கள் அன்பால் ஈர்த்துக் கொள்ளவேண்டும்.



நாலு, ஐந்துவயதுப் பிராயத்தில் தன்னைச்சுற்றி நடக்கும் சம்பவங்களை குழந்தைகளால் உணர்ந்து கொள்ள முடியும். இந்தக்குழந்தைகள் இரவில் விழிக்கும் நேரத்தில் பெற்றோரின் "நெருக்கத்தைக்" கூட பார்க்கும் சூழல் ஏற்படக்கூடும். அந்த நேரத்தில் குழந்தையை தனியாக தூங்கவைப்பதை விட, குழந்தை தூங்கியபிறகு இவர்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

7-8 வயதாகும்போது குழந்தைகள் சிறுவர்கள் நிலைக்கு வருகிறார்கள். இந்த பருவத்தில் அவர்களுக்கு வீட்டைத்தாண்டி பள்ளி உள்ளிட்ட வெளி இடங்களில் இருந்தும் நண்பர்கள் கிடைக்கிறார்கள். இப்போது அவர்களாகவே தனியறையில் தூங்கும் அளவுக்கு அவர்களுக்குள் ஒரு மாற்றம் நேர்கிறது. பெற்றோரே எடுத்துச்சொல்லி அவர்கள் தனியறையில் தூங்கும் பழக்கத்தை ஏற்படுத்திவிட வேண்டும்.

சில குழந்தைகள் இருட்டு என்றாலே பயப்படுவார்கள். அவர்களை "இருட்டு என்பது ஒருநாளின் கொஞ்சப்பகுதி. அவ்வளவுதான்" என்று தைரியமூட்டுவதோடு, அவ்வப்போது தைரியமான சரித்திர, புராணக்கதைகளை சொல்லலாம். தொடர்ந்து இப்படிச் செய்யும்போது இருட்டு பயம் அவர்களிடம் இருந்து விடைபெற்றுக்கொண்டு விடும்.

முற்றும் ...

# குடை மிளகாய் சிக்கன் டிக்கா

**தேவையான பொருட்கள்**

கோழிக்கறி – 1-2 கிலோ (எலும்பில்லாதது), மிளகு – 15, பச்சை மிளகாய் - 3, பெரிய வெங்காயம் - 4, இஞ்சி - ஒரு அங்குலத் துண்டு, பூண்டு - 6 பல், குடை மிளகாய் - 1, தயிர் - 1 கப், ப்ரஷ் க்ரீம் - 3 மே.கரண்டி, கார்ன்ஸ்டார்ச் - 1 மே.கரண்டி, முட்டை - 1 (வெள்ளைக் கரு மட்டும்), கரம் மசாலாத்தூள் - 1-2 தே.கரண்டி, ஏலப்பொடி – 1-2 தே.கரண்டி, எண்ணெய் - 4 மே.கரண்டி, வெண்ணெய் - சிறிது, உப்பு - தேவையான அளவு

**செய்முறை**



- கோழியினை கழுவி சுத்தம் செய்து கொண்டு, ஒன்றரை அங்குலத் துண்டுகளாக வெட்டிக் கொண்டு, நீரில்லாமல் சற்று உலரவிடவும். பின் மிளகினை வறுத்துப் பொடியாக்கிக் கொள்ளவும். வெங்காயம், இஞ்சி, பூண்டினைத் தோலுரித்துக் கொள்ளவும். வெங்காயத்தை நறுக்கிக் கொள்ளவும். இஞ்சி, பூண்டினை காம்பு நீக்கின பச்சை மிளகாயுடன் சேர்த்து பட்டுப் போல அரைத்துக் கொள்ளவும்.
- வெங்காயத்தை எண்ணெய்யில் பொன்னிறமாகப் பொரித்து எடுத்து, எண்ணெய்யை வடித்து பிறகு மையாக அரைத்துக் கொள்ளவும். குடைமிளகாயை கழுவி, விதைகளை நீக்கி, ஒரு அங்குலத் துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும். தயிரினை ஒரு மெல்லியத் துணியில் கட்டித் தொங்கவிட்டு, நீர் எல்லாவற்றையும் வடித்து எடுத்துக் கொள்ளவும்.
- ஒரு பெரிய பாத்திரத்தில் அரைத்த வெங்காய விழுது, இஞ்சி பூண்டு விழுது, தயிர், ப்ரஷ் க்ரீம், கார்ன்ஸ்டார்ச், முட்டையின் வெள்ளைக்கரு, நறுக்கின குடைமிளகாய் துண்டுகள், மிளகுத் தூள், ஏலப்பொடி, தேவையான உப்பு அனைத்தையும் சேர்த்து, ஒன்றாய் கலக்கவும். பிறகு அதில் கோழித் துண்டங்களைப் போட்டு நன்கு பிரட்டி சுமார் ஒரு மணி நேரம் குளிர்சாதனப் பெட்டியில் வைத்து நன்கு ஊறவிடவும்.
- பின் ஒரு சொருகு கம்பியில் கோழித்துண்டங்கள், குடைமிளகாய் துண்டங்கள் என மாற்றி மாற்றி சொருகி, தந்தூரி அடுப்பில் வைத்து கருகாமல் வேகவிட்டு எடுக்கவும். அல்லது, 250 டிகிரி சி க்கு சூடேற்றப்பட்ட ஓவனில் சுமார் 15 நிமிடங்கள் வைத்து எடுக்கவும். அவ்வப்போது எடுத்து, வெண்ணெய் தடவி மீண்டும் வேகவிடவும்.

# முகப்பரு நீங்க

பெரும்பாலான பெண்களின் அழகைச் சிதைப்பது முகப்பருக்கள்தான். இவை வராமல் தடுப்பதற்கு உணவுக் கட்டுப்பாடு அவசியம். எளிதில் ஜீரணம் ஆகக்கூடிய மென்மையான உணவுகளை உண்ண வேண்டும்.



- பழங்கள், காய்கறிகள், கீரை வகைகளை உணவில் அதிகம் சேர்க்க வேண்டும். தண்ணீர் நிறைய பருக வேண்டும்.
- கொழுந்து வேப்பிலையை தண்ணீரில் அரைத்து முகப்பரு இருக்கும் இடத்தில் பூசி 15 நிமிடம் கழித்து கழுவி விட வேண்டும்.
- முகத்திற்கு மஞ்சள் பூசுவதை முடிந்தவரை தவிர்த்து விடுங்கள். இப்போதைய மஞ்சளில் அதிக அளவு ரசாயன தன்மை இருக்கிறது.
- ரத்த சந்தன பவுடர் கடைகளில் கிடைக்கும். அதனை பன்னீரில் குழைத்து முகத்தில் பூசி 15 நிமிடங்கள் கழித்து கழுவி விட வேண்டும்.
- குளிர்ந்த தண்ணீரால் அடிக்கடி முகம் கழுவினால் களைப்பு நீங்குவதோடு முகத்தில் உள்ள எண்ணைப் பசையும் நீங்கும்.

அப்படியும் சருமம் உலர்ந்திருப்பது போல் தோன்றினால் மாய்சரைசர் தடவலாம். வெயிலில் செல்வதற்கு முன் "சன்ஸ்கிரீன்" லோஷன் தடவினால் சருமம் பாதிக்கப்படாது.

# தேன் !!



தேன் மலரில் உள்ளபோது சுத்தமாகவே உள்ளது. பின்பு தேனீயால் எடுக்கப்பட்டு தேன்கூட்டில் சேகரிக்கப்பட்டு அதனை நாம் உபயோகிக்கும்போது அதில் அலர்ஜியை உண்டாக்கும் மகரந்த தூள்களும், மிக கடுமையான பொடுலிசம் (BOTULISM) உண்டாக்கும் Clostridium bacteria இருக்கலாம்.

இதனால் உடல் தளர்ச்சி, பால் குடிக்க மறுப்பது, சோம்பலாக அழுவது, மலச்சிக்கல் என்பன ஏற்படலாம். எனவே தேனை நேரடியாகவோ மறைமுகமாகவோ ஒரு வயதுக்கு குறைவான குழந்தைகளுக்கு உபயோகிக்கக் கூடாது.

அலர்ஜி, ஆஸ்துமா போன்ற நோய்கள் இருக்கும் ஒரு வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கும் தேன் கொடுப்பது தவிர்க்கப்பட வேண்டியதொன்றாகும். மருந்திற்காக தேன் பாவிப்பது உண்மை, ஆனால் தற்பொழுது தேன் பாவிப்பதால் பிரச்சனைகள் ஏற்படுவதாக ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டதாரிப் பயிலுனருக்கு நிரந்தர நியமனம்

எம்.ரீ.எம்.பர்ஹான்

மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் அண்மையில் சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிப் பயிலுனர்களுக்கான நிரந்தர நியமனங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிப் பயிலுனர்களுக்கு கடந்த 2014-04-09 ம் திகதி வழங்கிவைக்கப்பட்ட நிரந்தர நியமனங்கள் பெரும்பாலும் வெளி மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதனால். இவற்றை அம்பாறை மாவட்டத்திற்குள் அல்லது குறைந்த பட்சம் கிழக்கு மாகாணத்திற்குள் மாற்றி வழங்குமாறு ஜனாதிபதியின் அம்பாரை மாவட்ட இணைப்பாளரும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சம்மாந்துறை தொகுதி அமைப்பாளரும் சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளருமான அல் ஹாஜ் ஏ.எம்.எம். நௌசாட் அவர்கள் ஜனாதிபதியிடத்தில் தனது கோரிக்கையை சமர்ப்பித்துள்ளார்கள்.

மேற்படி நியமனங்கள் பெரும்பாலும் வெளி மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்மையினால் பட்டதாரிப் பயிலுனர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மின்சார வசதியின்றி தாய் சேய் பிணியாய்வு நிலையம்

புல்மோட்டை எம்.எஸ்.எம்.நியாஸ்

புல்மோட்டை தாய் சேய் நல பிணியாய்வு நிலையத்தில் கடந்த ஆறு மாத காலமாக மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதால் பிணியாய்வு நிலையத்துக்கு செல்கின்ற குழந்தைகள்,கற்பிணித்தாய்மார்களுக்கு அசௌகரியமான நிலை நிலவுவதாக தாய்மார்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

திருகோணமலை குச்சவெளி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் கீழ் இயங்கி வருகின்ற புல்மோட்டை தாய் சேய் நல பிணியாய்வு நிலையத்தில் வாரம் தோரும் நூற்றுக்கதிகமான கற்பிணித்தாய்மார்கள், சிறு குழந்தைகள் அவர்களின் நிறை,அளவு,போசாக்கு போன்ற உடல் ஆரோக்கிய சுகாதாரத்தன்மையை பரிசோதிப்பதற்காக செல்கின்றார்கள்.அவர்களுடைய பரிசோதனை முடிவதற்காக பல மணிநேரம் காத்துகொண்டு இருக்கின்றார்கள் இந்நிலையில் அங்கு மின்சாரம் இல்லாததனால் காத்தோட்ட வசதிகள் எதுவும் இல்லை. இதனால் சிறு குழந்தைகள், தாய்மார்கள் வியர்வையில் அவதிப்படுகின்ற கஸ்டமான நிலை உள்ளதாக பாதிக்கப்படுகின்ற தாய்மார்கள் முறையிடுகிறார்கள்.

அதேவேளை மின்சாரம் இல்லாததனால் பிணியாய்வு நிலையத்தில் குடிப்பதற்கோ,கழிவறை செல்வதற்கோ தண்ணீர் இல்லாத நிலை காணப்படுகிறது. இதனால் கற்பிணித்தாய்மார்களுடைய பரிசோதனைகளுக்காக சிறு நீர் தேவைப்படுவதால் அவைகள் எடுத்து கொடுக்க கூடிய வசதி இல்லாத பாரிய அசௌகரியத்துக்கு உள்ளாகின்றனர். இது சுகாதார நிலையத்தில் சுகாதாரம் இல்லை என்ற நிலை உள்ளதாக தாய்மார்கள் தெரிவிக்கின்றார்கள்.

# 5 மாணவிகள் வல்லுறவு 5ம் வகுப்பு ஆசிரியருக்கு விளக்கமறியல்

திருக்கோவில், தங்கவேலாயுதபுரம் பகுதியிலுள்ள பாடசாலையொன்றின் 5 மாணவிகளை துஷ்பிரயோகம் செய்ததாக கூறப்படும் ஆசிரியர், 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பொத்துவில் நீதவான் நீதிமன்றத்தின் நீதிபதி முன்னிலையில், சந்தேகநபர் நேற்று மாலை ஆஜர்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் எதிர்வரும் 05 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஐந்தாம் தர மாணவிகள் ஐவரை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் சந்தேகநபரான ஆசிரியர் நேற்று முன்தினம் திருக்கோவில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

அத்துடன், பாதிக்கப்பட்ட சிறுமிகள் அக்கரைப்பற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை திருக்கோவில் காவல்துறை முன்னெடுத்துவருகின்றனர்.

# "சனாதிபதி அவர்களே ! பொதுபல சேனாவைத் தடை செய்யுங்கள்"

பொது பல சேனா அமைப்பை தடை செய்யுமாறு கோறளைப்பற்று காத்தான்குடி நகர சபை தலைவர் எஸ்.எச்.அஸ்பரினால் ஜனாதிபதிக்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இக் கடிதத்தில் இலங்கையில் பொது பல சேனா எனும் பௌத்த தீவரவாத அமைப்பு, ஒரு பயங்கரவாத அமைப்பாகும். இந்த அமைப்பை இலங்கையில் தடை செய்ய வேண்டும்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள சமாதானத்தை குழப்புவதிலும், சமாதானத்திற்கு குந்தகம் ஏற்படும் வகையிலும் பொது பல சேனா அமைப்பு செயற்பட்டு வருகின்றது.

கடந்த முப்பது வருடங்களாக இடம்பெற்ற யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து நாட்டில் ஐக்கியத்தையும், சமாதானத்தையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தியுள்ள சமகாலத்தில், இலங்கையின் இறைமைக்கு எதிராகவும், தேசிய நல்லிணக்கத்திற்கு எதிராகவும் இந்த பொது பல சேனா எனும் பௌத்த தீவிரவாத அமைப்பானது செயற்பட்டு வருகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## அழைப்பிதழ்

சிரேஷ்ட ஊடகவியலாளர்

சின்னையா குருநாதனின்

"ஒரு நிருபரின் களப்பதிவுகள்"

நூல் வெளியீட்டு விழா



இடம் : தி/ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

காலம் : 27.04.2014 ஞாயிற்றுக்கிழமை

நேரம் : மாலை 4.00 மணி

வெளியீடு: திருக்கோணமலை அம்மா பதிப்பகம்

ஏற்பாடு: நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டம் 0778812912


# பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களின் பிடியில்

## பொதுவைத்தியசாலைப் பெட்டிக் கடைகள்



திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு முன்னால் பல வருட காலமாக மக்களை ஏமாற்றி விற்பனை செய்யப்பட்டு வந்த நடமாடும் கடை வியாபாரிகளின் பாவனைக்கு உதவாத உணவுப்பொருட்களை பொது சுகாதார பரிசோதகர்கள் கடந்த புதன்கிழமை பிற்பகல் மீட்டுள்ளனர்.

குறித்த நடமாடும் கடை வியாபாரிகள் பழவகைகள் மற்றும் உணவுப் பண்டங்கள் (வடை) பழுதடைந்து காணப்பட்ட போதிலும் தூர இடங்களில் இருந்து வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களின் உறவினர்கள் பழுதடைந்த பழவகைகளையும் உணவுப் பண்டங்களையும் வாங்கி உண்ணும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகப் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டது.

அந்த முறைப்பாட்டை அடுத்து நடமாடும் கடை வியாபாரிகளை பரிசோதனை செய்த போது பழுதடைந்த வடைகள் மற்றும் பழவகைகள் மீட்கப்பட்டுள்ளன .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேசச் செய்திகள்

# "பேஸ்புக்" கின் 3 மாத இலாபம் 642 மில். அமெரிக்க டொலர்

சமூக வலைத்தளமான பேஸ்புக் இவ்வாண்டின் முதல் காலாண்டில் 642மில்லியன் அமெரிக்க டொலர்களை இலாபமாக ஈட்டியுள்ளது.

இதற்குமுன்னர் கணிப்பிடப்பட்ட தரவுகளை பின்தள்ளி இம்முறை அதிக வருமானத்தை பேஸ்புக் ஈட்டியுள்ளது..

தொலைபேசி ஊடான விளம்பரங்கள் ஊடாக 2.5 பில்லியன் இலாபம் கிடைத்துள்ளதாக பேஸ்புக் தெரிவித்துள்ளது.

இதனிடையே தமது நிதித் துறை சிரேட்ட அதிகாரி டேவிட் எபர்ஸ்மென் பதவி விலகவுள்ளதாக பேஸ்புக் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# மலேசிய விமானம் தரையிறக்கப்பட்டுள்ளது

மாயமான மலேசிய விமானம் இந்தியப் பெருங்கடலில் விபத்துக்குள்ளாகவில்லை எனவும், அது வேறு எங்கேயாவது தரையிறங்கியிருக்கலாம் எனவும் புதிய தகவல் வெளியாகியுள்ளது.

தேடுதல் குழு தவறான இடத்தில் தேடுதலை மேற்கொள்வதாகவும் விமானம் வேறு எங்கேயாவது தரையிறங்கியிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆர்370 விமானம் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்ளும் சர்வதேசக் குழுவினை மேற்கோள்காட்டி நியு ஸ்ட்ரெட்ஸ் டைம்ஸ் (New Straits Times) என்ற மலேசிய நாளிதழ் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

விமானம் காணாமல் போய் 45 நாட்களுக்குப் பிறகு இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.


மலேசிய பிரதமர் நஜிப் அப்துல் ரசாக் விமானம் தெற்கு இந்தியப் பெருங்கடலில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக கடந்த மாதம் உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

கடந்த மார்ச் மாதம் 8ஆம் திகதி எம்.எச்370 மலேசிய விமானம் காணாமல் போனது. இது மேற்கு அவுஸ்திரேலியா கடல் பகுதியில் விபத்துக்குள்ளாகி இருக்கலாமென கருதப்படுகிறது. இதனைத் தொடர்ந்து பல்வேறு நாடுகள் இந்தியப் பெருங்கடல் பகுதியில் தேடுலை முன்னெடுத்துள்ளன.

இதேவேளை, காணாமல் போன மலேசிய விமானம் குறித்து ஒரு வாரத்தில் தகவல் கிடைக்கும் என அவுஸ்திரேலிய பிரதமர் கடந்த 20 ஆம் திகதி நம்பிக்கை வெளியிட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# தம்பியைக் கொன்ற அக்கா

அமெரிக்காவில் சொந்த அக்காவே, தம்பியை துப்பாக்கியால் சுட்டுக்கொன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



அமெரிக்காவின் "உத்தவில் கேகி" பகுதியில் உள்ள வீடொன்றில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டிலிருந்த கைத்துப்பாக்கியை விளையாட எடுத்துவந்த 3 வயது சிறுமிக்கும் அவருடைய 2 வயது தம்பிக்கும் இடையில் சண்டை ஏற்பட்டுள்ளது.

இதன்போது தவறுதலாக கைத்துப்பாக்கி வெடித்ததில் சிறுவன் உயிரிழந்துள்ளான்.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

இச்சம்பவம் தற்செயலாக நடந்த விபத்து என வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து விசாரணை செய்த பொலிஸ் அதிகாரிகள், குண்டுகள் நிரப்பப்பட்ட துப்பாக்கியை குழந்தைகள் விளையாடும் இடத்தில் அவர்களது பெற்றோர் கவனக்குறைவாக வைத்திருந்ததே இந்தத் துயரச் சம்பவத்திற்குக் காரணம் எனக் கூறியுள்ளனர்.

# அமெரிக்க வீரன் விடுவிக்கப்படலாம்?





கைது செய்யப்பட்டுள்ள அமெரிக்க இராணுவ வீரரை தலிபான்கள் பண்டமாற்றின் அடிப் படையில் விடுதலை செய்யும் வாய்ப்புக்கள் எழுந்துள்ளதாக அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் செய்திக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. ஐந்து வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள அமெரிக்க சார்ஜன்ட் போவ்பேர்க்டல் சில தலிபானியர்களுக்காக விடுவிக்கப்படலாம் எனத் தெரிகின்றது.

# அகத்தியர் ஸ்தாபனத்திற்கு மூதூர் சைவக் குருமார் பயணம்


**மலைமுரசின் விளம்பரக் கட்டணம்**

| அளவு | முன்புறம் | பின்புறம் |
|---|---|---|
| A 7 | - 650.00 | 500.00 |
| A 6 | - 1175.00 | 975.00 |
| A 5 | - 2200.00 | 1900.00 |
| A 4 | - 4150.00 | 3800.00 |
| A 3 | - 7950.00 | 6950.00 |
| **அளவு** | **- பக்கம் 02 -** | **பக்கம் 15** |
| A 7 | - 350.00 | 200.00 |
| A 6 | - 575.00 | 475.00 |
| A 5 | - 1100.00 | 900.00 |
| A 4 | - 1950.00 | 1500.00 |
| A 3 | - 3450.00 | 2950.00 |

ஏனைய பக்கங்கள் - ரூ.18 சதுர அங்குலம்

மாவட்டச் செயலாளரின் அனுமதியுடன் புனருத்தாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட போது கடும் போக்குப் பௌத்த துறவியின் தலையீட்டினாலும் அதனைத் தொடர்ந்து சிங்களக் காடையர் சிலரின் அச்சுறுத்தலாலும் இடைநிறுத்தப்பட்டுள்ள பல நூற்றாண்டுகாலப் பழமை கொண்ட கங்குவேலி அகத்தியர் தாபனத்தை மூதூர் இந்துக் குருமார் சங்கத்தினர் சென்று பார்வையிட்டு வந்துள்ளனர்.

சிவஸ்ரீ. பாஸ்கரன் குருக்களின் தலைமையில் 24ம் திகதி சென்ற இந்துக் குருமார் சங்கத்தினர் எவ்வித தடைகளும் இன்றி அகத்தியர் தாபனத்தின் தற்போதைய நிலையினைத் தெரிந்து கொண்டு வந்துள்ளனர்.

13

## பாசிக்குடாவில் உல்லாசப் பயணிகளைக் கவர தென்னைப் பூங்கா

பாசிக்குடாவில் உல்லாசப் பயணிகளைக் கவரும் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வரும் இவ் வேளையில் இலங்கை தெங்கு அபிவிருத்திச் சபை தன்பங்குக்கு தெங்குப் பூங்காவொன்றை நிர்மாணிக்க முடிவெடுத்துள்ளது.

சுமார் 238 ஏக்கர் நிலப்பரப்பில் இப் பூங்காவை தெங்கு அபிவிருத்தி அமைச்சும் தெங்கு அபிவிருத்திச் சபையும் இணைந்து செயற்படுத்தவுள்ளது.


அந்நிலப்பரப்புடன் இணைந்த சுமார் 25

13


## சத்தியசாயி நிலையத்தில் இரத்ததானமும் அன்னதானமும்

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாவாவின் மஹா சமாதி தினமாகிய 24.04.2014 அன்று திருகோணமலை சத்ய சாயி நிலையம் நடத்தும் இலவச வைத்திய முகாமும் அன்னதான நிகழ்வுகளும் நடைபெற்றன.

இம் முகாமை திருமதி ஜெயகௌரி ஸ்ரீபதி அவர்கள் (பிரதேச செயலாளர், தம்பலகாமம்) தொடக்கி வைத்தார்.



## புனித மரியாள் கல்லூரியின் காணி முடிவு பிரதேசச் செயலரின் கைகளில்



நெல்சன் படமாளிகைக்கு முன்னுள்ள வெறுங்காணியை புனித மரியாள் கல்லூரியின் கல்வி நடவடிக்கைகளுக்கு ஒதுக்கியிருந்த போதும் அதன் பின்னர் திடீரென கம்பி வேலியிட்டு அதனை அரசு அறிக்கைப்படுத்தி எடுத்துக்கொண்டதை ஆட்சேபித்து திருமலை நகரசபை அங்கத்தவர் சி. நந்தகுமார் மாவட்ட செயலாளருக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தார்.

அக் கடிதத்திற்குப் பதிலளித்துள்ள திருகோணமலை மாவட்டச் செயலாளர் .இவ்விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் பொறுப்பை பட்டணமும் சூழலும்

13

## திருகோணமலையில் தமிழ்விழா




எதிர்வரும் 3.5.2014ல் தமிழ் விழா நடைபெற இப்பதாக அதன் ஏற்பாட்டாளர்கள் அறியத் தந்துள்ளனர்.

தொடர்ந்து இரண்டாவது வருடமாக நடைபெறவுள்ள இத் தமிழ் விழா இளைஞர்கள் சிலரின் கூட்டுமுயற்சியால் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

தில்லைநாதன் பவித்திரன் மற்றும் பத்மபிரசன் போன்றவர்களின் அயராத உழைப்பால் நடை பெறவுள்ள இத் தமிழ்விழா மேற் குறித்த திகதியில் உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

ஆர்வமுள்ள அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

அனுமதிகள் இலவசமே.


விளம்பரம் செய்யுங்கள்
வியாபாரத்தைப் பெருக்குங்கள்
அழைபேசி - 075-2954733



**Accountants & Audit Assistants Examination preparation Classes**

Subjects:

- FINANCIAL ACCOUNTING
- MANAGEMENT ACCOUNTING
- AUDITING
- GOVT. FINANCIAL REGULATION
- ENVIRONMENTAL STUDIES




May 03'2014 @ 10.00 a.m.

**VEAL BUSINESS COLLEGE**

159 A, SEA VIEW ROAD, TRINCOMALEE.

0262227622 0770203201


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org